New
Science Academy
In Front of B. M. C.
JAFFNA.
★ PHYSICS ★
By
சோதிலிங்கம்
திங், வெள்ளி - 4 00 p m.
சடப்பொருளியல்
செவ், வியாழன் - 4 00p m
ஒட்டமின்னியல்
புதன் - 4.00 - 6.00 p.m.
சடப்பொருளியல்
புதன் - 6 30 - 8.00 a. m.
வெப்பவியல்

பக்கங்கள் எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

New
Science Academy
In Front of B. M. C.
JAFFNA.
★ CHEMISTRY ★
By
செல்வரஞ்சன்
திங்கள், வெள்ளி - 6 30a m
தாக்கவியக்கவியல்
செவ், வியா - 6.30 a.m
அந்தின்
செவ், வியா - 5.00 p m
அவத்தை சம நிலை

சுடர் 5: பிரமோதூத ஞு வைகாசி மீ 08 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால்பிறை 26 (22 - 05 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 92

# ஈ.பி.ஆர்.எல்.எவ். - பிரேமா அடுத்தவாரம் நேரடிப் பேச்சு!

## பிரேமச்சந்திரன் எம். பி. தகவல்

— உதயன் கொழும்புச் செய்தியாளர் —

கொழும்பு, மே 22

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிப் பிரதிநிதிகளுடன் அடுத்த வார ஆரம்பத்தில் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்துவார்.

அந்த அமைப்பைச் சேர்ந்த திரு. கே. பிரேமச்சந்திரன் எம். பி இந்தத் தகவலை உதயனுக்கு நேற்று வெளியிட்டார்.

ஈ பி ஆர். எல். எவ். பிரதிநிதிகளை நேரடியாக அழைத்துப் பேசுவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருக்கிறார் என்றும்—

அனேகமாக எதிர்வரும் 28ஆம் திகதிக்கும் 30ஆம் திகதிக்கும் இடையில் இந்தச் சந்திப்பு நிகழும் என்றும் திரு. பிரேமச்சந்திரன் சொன்னார்.

இதேவேளை—

கொழும்பில் தற்போது நடைபெற்றுவரும் தெற்காசிய தஃவா இஸ்லாமிய கருத்தரங்கில் பங்குபற்ற வந்திருக்கும் பிரதிநிதிகளுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப். அஷ்ரப் எம். பி நேற்று முன்தினம் கொழும்பு ''மவுண்ட் லவேனியா ஹோட்டலில்'' இரவு விருந்து ஒன்றை அளித்தார்.

பெருந்தோட்டத் தொழில் துறை அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்னா மற்

(7 ஆம் பக்கம் பார்க்க)

ஹர்த்தால் பெரும் வெற்றி:

# வடக்கு - கிழக்கு நேற்று முழு அளவில் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், மே. 22

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அழைப்பு விடுத்த ஹர்த்தால் போராட்டத்தால் நேற்று வடக்கு - கிழக்கு மாகாணங்கள் செயலிழந்து சகல சேவைகளும் ஸ்தம்பிதம் அடைந்தன.

மலையக மக்களின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இனவாதத்தைக் கண்டித்தும், ஒரு லட்சம் மலையகத் தொழிலாளர்களை நாட்டை விட்டு வெளியேற்றுவதைக் கண்டித்தும் நேற்று ஹர்த்தாலுக்கு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்திருந்தது.

யாழ். குடாநாட்டில் அரச, கூட்டுஸ்தாபனங்கள், தனியார் நிறுவனங்களுக்கு ஊழியர்கள் எவரும் வராததால் அவை வெறிச்சோடிக் கிடந்தன. பாடசாலைகள் இயங்கவில்லை. சந்தைகள் கூட இல்லை. கடைகள் தேநீர் கடைகள் கூட மூடப்பட்டிருந்தன.

பஸ் சேவைகள் நடைபெறவில்லை. பஸ் நிலையப் பகுதி வெறிச்சோடிக் காணப்பட்டது. வாகனங்கள் ஒன்றையும் வீதியில் காணவில்லை.

அவசரதேவைகளுக்குச் சில கார்கள் வெள்ளைக் கொடிகளுடன் நகரத்துக்கு வந்திருந்ததைக் காண முடிந்

(7 ஆம் பக்கம் பார்க்க)

6 ஆவது திருத்தத்தை நீக்குதல்:

# அரசின் பொறுப்பைத் தட்டிக்கழிக்க ஈரோஸின் பிரேரணை உதவும்

## இப்படியும் ஒரு கருத்து

கொழும்பு, மே 22

அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கான தனிநபர் பிரேரணையாகக் கொண்டுவருவதற்கு ஈரோஸ் முயற்சிப்பது புத்திசாலித்தனமாகாது.

ஏனெனில் இப்போதைய நிலையில் அப்படி ஒரு பிரேரணை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படுமா என்பது சந்தேகமே.

இவ்வாறு கருத்துத் தெரிவித்தார் ஈ. பி. ஆர். எல். எவ். வைச் சேர்ந்த எம். பியான திரு. கே. பிரேமச்சந்திரன்.

ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு ஈரோஸ் பிரேரணை கொண்டு வந்தால் அதனை ஆதரிப்பீர்களா — என்று உதயன் செய்தியாளர் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

திரு. பிரேமச்சந்திரன் இது சம்பந்தமாகத் தெவித்ததாவது:-

அரசாங்கம்தான் அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கான சட்ட மூலத்தை சபையில் கொண்டு வரவேண்டும்.

ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கான சட்டமூலத்தை தனிநபர் பிரேரணையாக ஈரோஸ் கொண்டுவர முயற்சிப்பது புத்திசாலித்தன

(7 ஆம் பக்கம் பார்க்க)

● பயிலுநர் ஆசிரியர் தெரிவு

# வன்செயலில் உயிரிழந்தோரின் குடும்பத்தவருக்கு ஆசிரிய நியமனம்

யாழ்ப்பாணம், மே. 22

கடந்த கால வன்செயல்களின் போது உயிரிழந்தோரின் இரத்த உறவினர்களுக்கு பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெற வசதியளிக்கப்படும்.

ஏற்கனவே நியமனம் செய்யப்பட்ட பயிலுநர் ஆசிரியர்கள் எண்ணிக்கைக்கு மேலதிகமாக பல இடங்களில் வெற்றிடங்கள் நிரப்ப வேண்டியுள்ளது.

இந்த வெற்றிடங்களுக்கே உயிரிழந்தோரின் நெருங்கிய உறவினர்கள் நியமனம் செய்யப்படவிருக்கிறார்கள்.

இது குறித்து கல்வியதிகாரி ஒருவர் தெரிவித்ததாவது:-

''வன்செயல்களின் போது ஒருவரின் தந்தை, தாய், உடன்பிறந்த சகோதர, சகோதரிகள் யாராவது உயிர் இழந்திருந்தால், அவர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு பயிற்சி ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும்.

அத்தகையவர்கள் அண்மையில் நடைபெற்ற மேற்படி பயிற்சி ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சையிலும் நேர்முகத் தேர்விலும் பங்குபற்றி இருக்கவேண்டும்.

அப்பரீட்சைகளில் அவர்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகள்

[7ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்தி முரளி



ஒரிஸ்ஸா பற்றி புதுசா கதை வருகுது கண்டியளோ.!

## இராமேஸ்வர மீனவர்கள் காங்கேசனில்

சென்னை, மே 22

இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த பன்னிரண்டாம் திகதி காணாமற் போனதாகக் கூறப்படும் நான்கு தமிழக மீனவர்கள் தற்போது காங்கேசன்துறையில் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இவர்களை அழைத்து வர கொழும்பில் உள்ள இந்தியத் தூதருடன் தொடர்பு கொள்ளப்பட்டிருப்பதாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. செல்லமுத்து செய்தியாளரிடம் தெரிவித்தார். (இ-எ)

## நெடுந்தீவில் கரை ஒதுங்கிய தமிழகப் படகு

நெடுந்தீவு, மே 22

தமிழ் நாடு, இராமேஸ்வரப் பகுதியைச் சேர்ந்த இழுவைப் படகு ஒன்று, சமீபத்தில் வீசிய கடும் காற்றில் சிக்கி நெடுந்தீவுக் கரையை அடைந்தது.

படகையும், அதில் இருந்த மீனவர்களையும் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ-111)

## லோங் அடிகள் முத்திரை வெளியீடு

யாழ்ப்பாணம் மே. 22

வண. பிதா ரி. எம். எவ். லோங் அடிகளாரின் முத்திரை வெளியீட்டு விழா இன்று



யாழ்நகரில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட உள்ளது. லோங் அடிகளைத் தேசியவீரராகக் கௌரவித்து

## சிறப்பு மலர் உள்ளே...

இலங்கை அரசு முத்திரை ஒன்று வெளியிடுவதை முன்னிட்டே இந்த விழா ஏற்பாடு

(7 ஆம் பக்கம் பார்க்க)

ஆள்பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி:

# சந்திரசேகரன் நேற்று விடுதலை! மலையகத்தில் பதற்றம் தணிந்தது

நுவரெலியா, மே 22

மலையக மக்கள் முன்னணித் தலைவர் திரு. பெ. சந்திரசேகரன் நேற்றுக்காலை நுவரெலியா மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வைத்து ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இதனை அடுத்து தலவாக்கலையிலும் மலையகத்தின் மற்றும் பகுதிகளிலும் நடைபெற்று வந்த உண்ணாவிரதப் போராட்டமும், வேலை நிறுத்தங்களும் கைவிடப்பட்டன. மலையகத்தில் பதற்றம் தணிந்தது.

மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் கடந்த 15ஆம் திகதி தலவாக்கலையில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

ஒரு லட்சம் மலையகத் தமிழரை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பும் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவின் நிலைப்பாட்டுக்கு எதிராக மலையகத்தில் தீவிர பிரசாரம் மேற்கொண்டிருந்த சமயம் சந்திரசேகரன் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவரை விடுதலை செய்யக் கோரி கடந்த சில தினங்



சந்திரசேகரன்

களாக மலையகத்தில் சுமார் 60ஆயிரம் தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து வந்தனர். உண்ணாவிரதங்களும் இடம்பெற்றன.

சந்திரசேகரன் நேற்றுக் காலை 10-45 மணியளவில் நுவரெலியா நீதிமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டார். நுவரெலியா மாஜிஸ்திரேட் திரு காமினி குணவர்த்தனா அவரை ஆள் பிணையில் விடுவித்தார்.

சந்திரசேகரன் கண்டி பொலிஸ் நிலையத்தில் இருந்தே நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டார்.

அவர் விடுவிக்கப்பட்டு தலவாக்கலை திரும்பியபோது அவருக்குப் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அவரை விடுவிக்கக் கோரி சுமார் 20 பேர் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் கோயிலுக்கு அவர் சென்றார். அங்கு உண்ணாவிரதிகளுக்குப் பால்

(7 ஆம் பக்கம் பார்க்க)

# மாகாண சபைகளுக்கு கூடிய அதிகாரம், வருவாய்

## உயர்மட்டக் குழு ஆராயும்

கொழும்பு, மே 22

மாகாண சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குவது சம்பந்தமாக ஆராய்ந்து சிபார்சுகளைச் செய்வதற்கு எட்டு உயர் அதிகாரிகளைக் கொண்டகுழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவின் உத்தரவின் பேரில் நியமிக்கப்பட்டுள்ள பிரஸ்தாபகுழு ஓர் இணைப்புக்குழுவாகச் செயற்படும் என்று மாகாணசபைகள், உள்நாட்டலுவல்கள், பொது நிர்வாகத்துறை அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா உதயனுக்குத் தெரிவித்தார்.

★ மாகாணசபைகளுக்கு மேலதிகமாக நிர்வாக அதிகாரங்களை வழங்குவதற்கு, இப்போதுள்ள சம்பந்தப்பட்ட சட்டங்களில் என்னென்ன திருத்தங்களைக் கொண்டுவரவேண்டும்.

★ மாகாணங்களில் உள்ள வளங்களைப் பயன்படுத்தியும், வரிவிதிப்பு மூலமும் மாகாண சபைகளின் வருமானத்தை உயர்த்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்.

★ அந்த மாகாணசபைகளுக்குக் கிடைக்கும் வருமானத்தை அவற்றுக்கே கொடுத்துவிட சட்டத்தில் எந்த விதமான திருத்தங்களைச் செய்யவேண்டும்.

இந்த மூன்று பிரதான விடயங்கள் குறித்தே இணைப்புக்குழு ஆராய்ந்து விரைவில் அறிக்கை சமர்ப்பிக்கும் எனவும் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா மேலும் தெரிவித்தார். [அ-2]

# புலிகளின் தலைவர்களுடன் பேச ஹமீத் இன்று வடக்கே வருவார்

விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்களுடன் பேசுவதற்காக வடக்கு கிழக்கு மாகாண சமாதானக் குழுவின் தலைவரும் நீதி அமைச்சருமான ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் இன்று யாழ்ப்பாணம் வருவார்.

அவரது அமைச்சு வட்டாரங்கள் நேற்றிரவு இத்தகவலை ஊர்ஜிதம் செய்தன.

யாழ்ப்பாணம் வரும் அமைச்சர் ஹமீத் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராசா (மாத்தையா) செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் (யோகி), ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோரைச் சந்தித்துப் பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள ''முறுகல்'' நிலையைத் தவிர்ப்பது குறித்து அமைச்சர் விரிவாகப் பேசுவார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. (உ-3)

# ஒரிஸ்ஸா சென்றோருக்கு தென்னிந்தியாவில் பயிற்சி!

## தப்பி வந்தவர் திடுக்கிடும் தகவல்

மட்டக்களப்பு, மே 22

வடக்கு - கிழக்கிலிருந்து இந்திய இராணுவத்துடன் தப்பி ஓடிய இயக்கங்களைச் சேர்ந்த இளைஞர்கள்களுக்கு இந்தியாவில் மீண்டும் பயிற்சி அளிக்கப்படுகிறதாம்.

சொந்த மண்ணிலிருந்து கப்பலில் இந்தியா சென்று ஒரிஸா முகாமிலிருந்து தப்பி வந்து இப்போது மட்டக்களப்பில் வாழும் இராஜரட்ணம் சதாசிவம் (34 வயது) இந்தத் தகவலைத் தெரிவித்ததாக இங்கிருந்து வெளியாகும் ''கொண்டல்'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

திரு. சதாசிவத்தின் படத்துடன் அவரது பேட்டியையும் பிரஸ்தாப பத்திரிகை வெளியிட்டுள்ளது

திரு. இராஜரட்ணம் சதாசிவம், இந்திய இராணுவம் இங்கு நிலைகொண்டிருந்த போது ஈ. என். டி. எல் எவ் வுடன் சேர்ந்து இயங்கியவர்

இவ்வருடம் பெப்ரவரி இரண்டாம் திகதி மட்டக்களப்பில் இருந்து திருகோணமலைக்குத் தப்பிச் சென்றார். அங்கிருந்து 'திப்புசுல்தான்' கப்பலில் ஒரிஸாவுக்குச் சென்றார்.

ஒரிஸா அகதிகள் முகாமில் கஷ்டங்களை அனுபவித்த களைப்பில் அங்கிருந்து தப்பி ஓடினார். ஒரிஸாவிலிருந்து ஒருமாதிரி மதுரைக்குச் சென்றார். அங்கிருந்து இராமேஸ்வரம். அதன் பின்னர் யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னார் சென்று அங்கிருந்து மட்டக்களப்புக்கு புதுவருட தினத்தன்று வந்து சேர்ந்தார்.

இங்கிருந்து சென்ற இயக்க வாலிபர்களுக்குதென்மாநிலம் ஒன்றில் மீண்டும் பயிற்சி

[7ஆம் பக்கம் பார்க்க]

### சுப நேரம்

22 - 5 - 90

செவ்வாய்க்கிழமை வைகாசி 08

சுபநேரம் :
10.22 - 11. 52

இராகுகாலம்
02 52 - 04.22

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒல்லாந்திலிருந்து இறக்குமதி செய்த [Crimson Globe] பீற்றூட் விதை, விவசாய ஆய்வுகூட அனுமதி பெற்றது. உயர் விளைச்சல் தரவல்லது விற்பனைக்கு உண்டு பிள்ளையார், 259' காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3490)

### திருமணஅழைப்பு கார்ட்டுகள்

புதிய அச்சடிக்கும் திருமணக்காட்டுகள் சகலடிசைன்களிலும் விற்பனையாகிறது. உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய, ஸ்ரீகாந்த்-புத்தகசாலை மின்சார நிலைய வீதி, பஸ் நிலைய முன்புறம், யாழ்ப்பாணம். (C/5033)

### Pups For Sale

German Shepherd (Crossed) Pups six weeks Old. Wormed and weaned Ideal watch dog. Going cheap. Contact Pavendra 47, Temple Raod, Jaffna [13257]

### Restaurant

யாழ் சைனீஸ் றெஸ்றோறன்ற், முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம், அறைகளும் வாடகைக்கு உண்டு. [3430]

### மணமகன் தேவை

யாழ் நகர் கல்லூரியில் ஆசிரியையாக பணிபுரியும் 28 வயதான யாழ் இந்து வேளாள குடும்பத்தைச் சேர்ந்த ஆசிரியைக்கு அரசாங்க உத்தியோக மணமகன் தேவை. 129, மே/பா, உதயன். [13256]

### பூசகர் தேவை

ஸ்ரீ நாகபூஷணியம்பாள் தேவஸ்தானத்தின் இரு காலப் பூசைக்குப் பிராமணக் குடும்பஸ்தர் உடன் தேவை. வீட்டு வசதி உண்டு. சம்பளம் வேலைக்கும், தகைமைக்கும் ஏற்ப கொடுக்கப்படும். நேரில் வரவும். தர்மகர்த்தா (ஸ்ரீ நாக பூஷணியம்பாள் தேவஸ்தானம்) அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. (3493)

### புலமைப் பரிசில் பரீட்சை

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க ஆண்டு - 5 புலமைப் பரிசில் வகுப்புக்கான கணிதம், தமிழ் மாதிரிப் பரீட்சைகள் பிரதி சனிக்கிழமையும் மாலை 3 00-6.00 வரை நடைபெறும். வெளி மாணவர்களும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர் விபரங்களுக்கு எலைற் இன்ஸ்ரிரியூட் (வண்ணார் பண்ணை தபால் நிலையம் முன்பாக) 99, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (13260)


# மீனவர்களுக்கு விரைவில் மானியவிலையில் வலைகள்

## துணை அமைச்சர் தகவல்

மீனவர்களுக்கு, படகுகளுக்குத் தேவையான இயந்திரங்கள், வலைகள் மற்றும் உபகரணங்களை மானிய விலையில் வழங்க அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கொள்கை திட்டமிடல் உருவாக்கல் அமைச்சர் டாக்டர் விமல் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

கடற் தொழிலாளர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம் சம்பந்தமான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தக்கூடிய பல விடையங்களையிட்டு அரசு சிரத்தை காட்டி வருகிறது. மீன் பிடிக் கூட்டுறவு சங்கங்கள் பலப்படுத்தப்படவுள்ளன. 35 ஆயிரத்துக்கும் அதிகமான மீன்பிடிப்படகுகள் இதுவரை பதிவு செய்யப்படாமல் இருக்கின்றன. அவற்றைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

படகு, வலை, என்பவற்றுக்கும் தொழிலாளருக்கும் காப்புறுதி வசதிகள் செய்யப்பட்டுள்ளன. எனினும் ஒரு சிலருக்கு மட்டுமே இவ்வசதிகள் சென்றுள்ளதை நாம் அவதானிக்கின்றோம். 1 லட்சத்துக்கும் அதிகமான குடும்பங்களுக்கு காப்புறுதி வசதி கிடைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கடற்பசிஇன்றுமிகவும்வேகமாக அருகிவிடுவதாகஆய்வுகள்வெளிப்படுத்துகின்றன. இவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்பவர்களால் இந்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே கடற்பாசிவகைகளை கடலில் பயிராக்கவும், விதைகளை உற்பத்தி செய்யவும் ''நாரா'' நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இறால் உற்பத்திக்கு கூடுதலான முக்கியத்துவம் அளிக்கப்பட்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது - என்றார். [அ-2]

# பாண் கோதுமைமா பாவனை படிப்படியாக நிறுத்தப்படும்

கொழும்பு, மே. 22

பாண் உண்ணும் வழக்கம் விரைவில் நிறுத்தப்பட்டு விடும்.

கோதுமை மா இறக்குமதியும் படிப்படியாக நிறுத்தப்படும்.

இத்தகவலை உணவுஅமைச்சர் வீரசிங்கா மல்லிமாராச்சி வெளியிட்டார்.

கோதுமை மா இறக்குமதி நிறுத்தப்படுவதற்கான காலவரையறை இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை என்றும அமைச்சர் சொன்னார்.

இலங்கையில் பாண் உண்ணும் வழக்கம் போர்த்துக்கேசரால் 1505 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது என்றும் அமைச்சர் சொன்னார்.

சராசரியாக ஒரு பிரசை ஒரு மாதத்தில் 35 கிலோ கிராம் கோதுமை மா உண்பதாகவும் அமைச்சர் சொன்னார். (உ-எ)

## பென்ஷன்காரர்

பிள்ளைகளின் எந்தவித ஆதரவுமின்றி வாழும் பென்ஷன்காரர்களுக்கு என்று தனியான வீடமைப்புத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படும். என்று ஓய்வூதியத்திணைக்கள பணிப்பாளர் ஆர் டபிள்யு பியசேன்தெரிவித்தார். (இ-எ)

# மாணவர் சமுதாயத்துக்கு பெரும் சேவை செய்தவர்

## தமிழ் சுருக்கெழுத்து தந்தை நினைவு தினத்தில் உரை

பருத்தித்துறை மே 21

''அமரராகி விட்ட ஈழத்து தமிழ் சுருக்கெழுத்துத் தந்தை மனித காருண்யம் மிக்கவர் அவர் தன்னிடம் சுருக்கெழுத்துப் பயின்ற மாணவர்களிடம் அன்பாகப் பழகி அவர்களது தனிப்பட்ட கஷ்டங்களிலும், துக்கங்களிலும் பங்கு கொண்டு அவர்களது குடும்பத்தவர்களுள் ஒருவராகி மாணவ சமுதாயத்திற்குப் பெரும் சேவை செய்தவர். அவர் தமிழ் சுருக்கெழுத்தைப் போதிக்க அபிவிருத்தி செய்ய எடுத்த முயற்சிகள் எண்ணிலடங்கா. அப்படிப்பட்ட திரு. சி இராமலிங்கம் ஆசிரியர் இன்று எம்மிடையே இல்லை. எனினும் அவரது மாணவர்கள் தொடர்ந்து அவரது கல்விப் பரம்பரையை உருவாக்குவார்கள்''

வடமாராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தால் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியில் நடாத்தப்பட்ட ஈழத்து தமிழ் சுருக்கெழுத்துத் தந்தை திரு. சி. இராமலிங்கத்தின் முதலாவது நினைவு தின விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் திரு. கா. ஏரம்பமூர்த்தி இவ்வாறு குறிப்பிட்டார்.

கழகச் செயற் குழு உறுப்பினர் செல்வி. வளர்மதி சுந்தரலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இவ்விழாவிற்கு தலைமை தாங்கிய சழகத் தலைவரும் சம்மாந்துறை, யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரிகளின் முன்னாள் சுருக்கெழுத்துப் போதானாசிரியருமான திரு. சி. குலசிங்கம் பேசியதாவது ''கழகம் சுருக்கெழுத்து தட்டச்சுப் பயிற்சிகளை சேவை நோக்குடன் போதித்து வருகிறது. இதற்குப் பல தனி நபர்களும், பொது நிறுவனங்களும் உதவி செய்துள்ளன. எமது மாணவரிடையே மறைந்துள்ள கலை உணர்வை வெளிக்கொண்டு வருமுகமாகவும் சுருக்கெழுத்துக் கலையை வளர்க்க காரணகர்த்தாவாக இருந்தவர்களை நினைவு கூருமுகமாகவும் இவ்விழா ஒழுங்கு செய்யப்பட்டது'' என்றார்.

அகதிகள் புனர்வாழ்வு நிதியம் - 1983 இன் பிரதிநிதி திரு. வ. பரமசிவம் பேசுகையில் கூறியதாவது ''இக்கழகம் ஆற்றிவரும் சேவைகளை அதன் இன்றைய விழா மூலம் உணரக் கூடியதாகவுள்ளது. சுருக்கெழுத்து தட்டச்சு தொடர்பான கருத்துக்களை மாணவர்கள் கவிதை, பட்டிமன்றம், வில்லிசை மூலம் ஏனையோருக்குப் பரப்புவது ஒரு புதிய முயற்சி'' என்றார்.

இறுதியாக கழகச் செயலாளர் திரு. க. வ. சிவச்சந்திரதேவன் நன்றியுரை கூறினார். (118)

# நவாலி மகாவித்தியாலயத்தில் ஜீ. சி. ஈ உயர்தரவகுப்புகள்

## கல்விப்பணிப்பாளர் உறுதி

மானிப்பாய், மே. 22

''நவாலி மகாவித்தியாலயத்தில் ஜீ.சி.ஈ உயர்தர வகுப்புக்கள் நடத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்''

அண்மையில் ஆசிரியர் தின விழா நவாலியில் நடைபெற்ற போது விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இவ்வாறு உறுதியளித்தார்.

நவாலி கொத்தணிப் பாடசாலைகளது ஆசிரியர்களுக்கென அதிபர் திரு. ஐ.மனோசரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தொடர்ந்து பேசிய கல்விப் பணிப்பாளர் கூறியதாவது;

முன்னேற்ற வேண்டிய யாழ் மாவட்டக் கொத்தணிகளுள் நவாலி கொத்தணியும் ஒன்றாகும். இங்கு உயர்தர வகுப்பு இல்லாமை பெரும் குறை. இதனைப் போக்க உடன் நடவடிக்கை எடுப்பேன் என்றார்.

கடந்த வருடப்பாடசாலை நாட்களில் விடுமுறை எடுக்காமல் கடமைக்கு வந்த அதிபர் திரு. நா. சிவபாதம் (புத்தொளி), அதிபர் திரு. க. கணபதிப்பிள்ளை, உப அதிபர் திரு. சி. நாகையா ஆகியோரை ஆசிரியர் திரு. சிறில் சுகந்திரன், அதிபர்கள் திரு. சு. மகாலிங்கம், திரு. இ. சுந்தையா திருமதி சுப்பிரமணியம் ஆகியோர் பாராட்டினர்.

மருதனாமடம் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. க. குலசேகரன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற இவ்விழாவில் சேவை பாராட்டப்பட்டோருக்கு அதிபர் திரு. இ. சுந்தரலிங்கம் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்க அதிபர் திரு. க. கணேசலிங்கம் நன்றியுரைத்தார். (ப-90)

## ஜ. தொ. கா. புதிய தலைவர் தெரிவு ஜூனில்

கொழும்பு, மே 21

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் புதிய தலைவர் பதவி தெரிவு எதிர் வரும் ஜூன் பத்தாம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைவராக இதுவரை பணிபுரிந்து வந்த ஜனாப் அஸீஸ் காலமானதைத் தொடர்ந்தே புதிய தலைவர் தெரிவு இடம் பெறுகிறது. (இ-எ)

# போராட்டம் எவ்வாறு அமைந்தாலும் எம்மைப் பலப்படுத்துவோர் மக்களே

## பாடசாலைக் கலை விழாவில் பாப்பா

கைதடி மே 22

''எமது அடிப்படை, சுய நிர்ணய உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கில் நாம் எவ்வகைப் போராட்டத்தை முன்னெடுத்தாலும் மக்களாகிய நீங்கள் ஒத்துழைப்புத் தந்து எங்கள் கரங்களைப் பலப்படுத்த வேண்டும்.''

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் நூலக அபிவிருத்திக்கென உயர்தர மாணவர் மன்றத் தலைவி செல்வி சி. சோபனா தலைமையில் கலை விழாவொன்று அண்மையில் நடைபெற்றது. விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தென்மராட்சி அரசியற் பொறுப்பாளர் பாப்பா மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார். அவர் மேலும் பேசுகையில் ''நீண்ட காலம் நாம் போரிட்டு வந்த எதிரியுடன் இன்று பேச்சுவார்த்தை செய்கிறோம். ஆனால் இதுவரை எமது உரிமைகளைத் தரும் தீர்வுகளை இலங்கை அரசு மேற்கொள்ளவில்லை. முக்கியத்துவம் வாய்ந்த இக்கட்டத்தில் பெற்றோர், மாணவர்களாகிய நீங்கள் எமது மக்கள் சக்தியை உலகுக்கு எடுத்துக் காட்டத் தயங்கக் கூடாது'' என்றார்.

இவரை அடுத்துப் பேசிய கொடிகாமம் பிரதேச அரசியல் பொறுப்பாளர் ராகுலன், ''இதுவரை களப்பலியான எமது வேங்கைகளின் மாபெரும் தியாகங்களால் தான் நாம் இன்று இவ்வாறான நிகழ்ச்சிகளை நடத்தக் கூடியதாக இருக்கின்றது. இத்தியாகங்களின் பெறுமதியை உணர்ந்து மாணவ மணிகளாகிய நீங்கள் படிப்பில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்'' என அறிவுறுத்தினார்.

மேலும் தென்மராட்சி மாணவர் அமைப்பு பொறுப்பாளர் ரஞ்சன், மற்றும் பலரும் விழாவில் உரையாற்றினர். (ப-74)

# எச்செல்வமும் அழிந்துவிடும்; அழியாதது கல்விச் செல்வமே

உங்கள் கல்விக்கு ஊக்கம் கொடுத்தவர்களை நீங்கள் என்றும் மறக்கலாகாது. கல்வியை வழங்குவது தாய் பிள்ளைக்கு உணவு ஊட்டுவது போன்ற ஒரு செயற்பாடாகும். எச் செல்வமும் அழிந்து விடும் ஆனால் கல்விச் செல்வம் அழிக்க முடியாதது. முற்றாகக் கற்கவும் முடியாதது.

முல்லைத்தீவுபுனித டொன் பொஸ்கோ ஒன்றியத்தின் தலைவர் திரு. யோசப் பாக்கியராசா மேற்கண்டவாறு கூறினார்.

கொக்குளாய் கொக்குத்தொடுவாயில் மீண்டும் குடியமர்ந்து கல்வி கற்கும் மாணவர்களுக்கு யாழ். புனித முன்னேற்றச் சங்கத்தால் வழங்கப்பட்ட அப்பியாசப் புத்தகங்களை வழங்கும் வைபவத்தில் அவர் மேலும் பேசியதாவது:-

நீங்கள் புத்தகங்களை பத்திரமாக பாவிக்க வேண்டும். உங்களுக்கு கீழே உள்ளவர்கள் அடுத்த ஆண்டு இப் புத்தகத்தையே பயன்படுத்தவுள்ளனர். இப்புத்தகங்களூடாகவே தமது கல்வியை வளர்க்க முடியும். அரசு இலவசக் கல்வியை வழங்கிய போதிலும் நீங்கள் கடந்த எட்டு வருடங்களாக தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ள முடியாமலிருந்தது துரதிஷ்டவசமே என்றார்.

அப்பியாசப் புத்தகங்களை உதவிப் பங்குத் தந்தைஅருட் திரு. தவராசசிங்கம் வழங்கினார். செயலாளர் திரு.ஜெயசீலனின் நன்றியுரையுடன் வைபவம் முடிவுற்றது. (இ-24)

## பங்கர் ஞாபகார்த்த விரிவுரை

வட்டுக்கோட்டை, மே.22

யாழ்ப்பாணம் கைலாசபதி அரங்கில் எதிர்வரும் 23 ஆம், 24 ஆம திகதிகளில் 'பங்கர்' ஞாபகார்த்த விரிவுரை இடம் பெறும்.

சென்னை கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் வண. டாக்டர் பிரான்சிஸ் சவுந்தரராஜ் இரு தினங்களும் உரை நிகழ்த்துவார்.

முதல்நாள் கூட்டத்துக்கு திரு. ஏ. கதிர்காமர் தலைமை வகிப்பார். இரண்டாம் நாள் கூட்டத்துக்கு கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தலைமை வகிப்பார். (இ-161)

## 42 சதவீதம் 15 வயதுக்கு உட்பட்டோர்

கொழும்பு, மே 22

இலங்கை சனத்தொகையில் 42 சதவீதமானோர் பதினைந்து வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளே,

இவர்களில் 10-15 வீதமான குழந்தைகள் நடத்தை, வளர்ச்சி மற்றும் உணர்ச்சி வயப்படுத்தல் ஆகிய துறைகளில் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

குழந்தை நல நிபுணர் டாக்டர் ஹேமமாலி பெரரா இத்தகவலை வெளியிட்டார். (ஏ)

சார்க் மாநாடு

# இலங்கையும் மாலைதீவும் பேசித்தீர்க்க வேண்டும்

கொழும்பு மே 21

சார்க் அமைப்பின் அடுத்த உச்சிமாநாட்டை எங்கே நடத்த வேண்டும் என்பதை மாலைதீவும் இலங்கையும் தங்களுக்குள் பேசித்தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று இந்தியா கூறிவிட்டது.

புதுடில்லியில் பிரதமர் வி.பி.சிங் தன்னைச் சந்தித்த இலங்கைப் பிரதமர் விஜேதுங்காவிடம் இதனைத் தெரிவித்தார் என்று அமைச்சர் விஜேரத்தினா செய்தியாளரிடம் சொன்னார்.

இதைத் தொடர்ந்து மாலைதீவு அரசுடன் பேச இலங்கை தனது வெளியுறவு அமைச்சரை அனுப்பக்கூடும் என்றும் திரு. விஜேரத்தினா சென்னார். (எ).

## தொண்டர் அறிமுக விழா

சாவகச்சேரி, மே 21

இலங்கை குடும்பத்திட்டச் சங்கத்தின் ஆதரவில் மட்டுவில் தெற்கு திட்டக்கிராமிய தொண்டர் அறிமுகவிழாவும், கலை விழாவும் தென் மட்டுவில் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம் பிள்ளை கலந்து கொண்டார்

யாழ் மாவட்ட திட்டமுகாமையாளர் திரு. கி. அன்பானந்தன், பளை உதவி அரசாங்க அதிபர் திரு. சு. கந்தசாமி, அதிபர் க. இளையதம்பி, ஆசிரியை திருமதி ம. செல்லையா, டாக்டர் பே. பிலிப்பு ஆகியோர் சிறப்புரைகள் வழங்கினர்.

20 தொண்டர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து குழுநடனம், கவியரங்கு, நாடகம் ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. (இ-31)

# நடமாடும் தபால் சேவைக்கு காங்கேசனில் 2 மாடி கட்டடம்

காங்கேசன்துறை மே 22

நடமாடும் தபால் சேவைக்கான புதிய இருமாடிக் கட்டடம் ஒன்று காங்கேசன்துறையில் அமைக்கப்படும்.

காங்கேசன்துறை புகையிரத நிலையத்துக்கு அருகே அமையவிருக்கும் இக்கட்டடம் தபால்ரயில் உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் தேவைப்படும் பட்சத்தில் தங்கியிருந்து பணியாற்றும் வசதிகள் கொண்டதாகக் கட்டப்படும்.

நடமாடும் தபால் சேவைக்கென ஏற்கனவே இருந்த கட்டடம் இந்திய அமைதிப் படையின் பாவனைக்கு உட்பட்டதால் பெரிதும் சேதமுற்று இப்போது உபயோகம் அற்ற நிலையில் இருக்கிறது. (ப 68)

## மகோற்சவம்

யாழ்ப்பாணம், மே. 22

யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் வருடாந்த மகோற்சவம் 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்துத் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

தேர்த் திருவிழா ஜூன் 7 ஆம் திகதியும், தீர்த்தத் திருவிழா ஜூன் 8 ஆம் திகதியும் நடைபெறும். [க]

## பருத்தித்துறை தபால் நிலையம்

வல்வெட்டித்துறை மே 22

பருத்தித்துறைத் தபால் நிலையக்கட்டடம் கடந்த ஐந்து வருடங்களாக பருத்தித்துறை இராணுவமுகாமுக்குள் உள்ளடக்கப்பட்டமையால் தற்போது தபால் நிலையம் பருத்தித்துறை வேலாயுதம் பாடசாலைக்கு எதிரேயுள்ள ஒருசிறு கட்டடத்திலேயே இயங்குகின்றது

தபால் நிலையக் கட்டடதில் இயங்கி வந்த பொலீஸ் நிலையம் அண்மையிலுள்ள வேறொரு கட்டடத்திற்கு மாற்றப்பட்டதை அடுத்து தபால் நிலையத்தின் சொந்தக் கட்டடத்திலேயே மீண்டும் தபால் நிலையத்தை இயங்கச்செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன. (க-160)

# யாழ். நகரில் நடைபெற்ற மொறிசியஸ் தமிழர் தினம்

யாழ்ப்பாணம், மே 22

மொறிசியஸ் தமிழர் தினம் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்றது. உலகத் தமிழர் விழாவின் முதல் நிகழ்ச்சியாக இது குரும்பசிட்டி உலகத் தமிழர் ஆராய்ச்சி நிலையத்தினால் நடத்தப்பட்டது.

மொறிசியஸ் தமிழர் தினத்தையொட்டி, 1989 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை நடைபெற்ற ஏழாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு நிகழ்ச்சிகளின் தொகுப்பு 2 மணி நேர வீடியோ காட்சியாகக் காண்பிக்கப்பட்டது

இவ்விழாவில் மொறிசியஸ் நாட்டின் தமிழர் வாழ்வியல் சம்பந்தமான புகைப்படங்கள், ஆவணங்கள், தமிழ் ஏடுகள், ஆராய்ச்சி நூல்கள் ஆகியன காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. மொறிசியஸ் நாட்டு தபால் தலைகள் மற்றும் நாணயங்கள் என்பனவும் அங்கு இருந்தன. தமிழ் மொழியைப் படிப்பித்தல் சம்பந்தமான பாடத்திட்டங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

மொறிசியஸ் முத்திரைகள், நோட்டுக்களில் தமிழுக்கும் இடம் அளிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது. தமிழர்கள் மொறிசியஸில் 250 ஆண்டுகளுக்கு முன்னர் குடியேறியதை நினைவுகூரும் விதத்தில் சிலம்புத்தூபி ஒன்று எடுக்கப்பட்டுள்ள தகவலும் அது சம்பந்தமாக வெளியிடப்பட்ட மலர் மூலம் தெரிய வந்தது.

உலகத் தமிழாராய்ச்சி பற்றிய வீடியோக் காட்சியின் மூலம் மொறிசியஸ் தமிழர்கள் தமது இனத்தின் பண்பாடு, கலாசாரம், மதம் என்பவற்றைப் பேணிக்காத்து வருவதைக் காண முடிந்தது.

ஆனால் மாநாட்டில் கலந்து கொண்டு அத்தனை மொறிசியஸ் தமிழ்ப் பிரதிநிதிகளும், தமது தமிழ்ப் பேச்சுக்களை வேற்றுமொழியில் எழுதிவைத்தே வாசித்ததைக் கேட்க முடிந்தது.

உலகத் தமிழராய்ச்சி மாநாட்டு நிகழ்ச்சியில்கலந்து கொண்டு உரையாற்றிய வெளிநாட்டுப் பிரதிநிதிகளில் ஒருவர் பின்வருமாறு கூறியிருந்தார்:-

தமிழ் வளர்ச்சிக்கு மொறிசியஸ் அரசு உதவ முன்னிற்கிறது தமிழை வளர்க்க மொறிசியஸ் தமிழர்கள் ஆவலும், ஆர்வமும் கொண்டுள்ளார்கள், இந்த எழுச்சியில் அடிப்படையிலாவது தமிழைத் தமிழர்கள் எல்லோரும் வீட்டு மொழியாகப் பயன்படுத்த உறுதி பூண வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன் — என்றார்.

அதுவே இன்றைய மொறிசியஸின் தமிழர் தேவையாக இருக்கிறது.

வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடந்த மொறிசியஸ் தினவிழாவுக்கு ஏராளமான மக்கள் வந்திருந்தனர். எழுத்தாளர் திரு. ஐ. சாந்தன் விழாவுக்கு வந்த அதிதிகளை வரவேற்றுப் பேசினார். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். யாழ். பல்கலைக்கழக நுண்கலைக்கல்லூரி மாணவிகள் மொறிசியஸ் கீதம் பாடினார்கள். (அ)

# டெலிவிஷன் நிகழ்ச்சிகளை வானொலியிலும் கேட்கலாம்

கொழும்பு மே 22

டெலிவிஷன் நிகழ்ச்சிகளை ஒரே சமயத்தில் வானொலியிலும் இனிமேல் கேட்கலாம் என்றும் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத் தலைவர் ஹட்சன் அமரசிங்க தெரிவித்தார்.

இத்திட்டம் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் முதல் அமுல் செய்யப்படும் என்றும் திரு. அமரசிங்கா தெரிவித்தார்.

இதற்காக ஒரு கோடி 60 லட்சம் ரூபா செலவில் தயாரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (எ)

## திருத்தல பாதயாத்திரை

சாவகச்சேரி மே 22

செட்டிகுளம் உ. அ. அதிபர் பகுதியில் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா தலைமையில் திருத்தலபாதயாத்திரை ஒன்று இம்மாதம் 29 ஆம் திகதி ஆரம்பமாகி ஐந்து தினங்களுக்கு தொடர்ந்து நடைபெற ஏற்பாடாகி இருக்கிறது. (க-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்கது இல்.

**பொருள்:**

கடல் போன்ற காமநோயால் வருந்தியும், மடலேறாமல் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருக்கும் பெண் பிறப்பைப் போல் பெருமையுடைய பிறவி இல்லை


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288

22 - 05 - 1990 த. பெ இலக்கம் 25


# மாறிவரும் நிலையில்......

ஸ்ரீலங்கா அரசின் போக்கில் மாற்றம் இருக்கிறது. நாம் நேர்மையாக உண்மை, நேர்மை என்ற போக்கில் — எமது மக்களின் நலன்களுக்காகப் போராடுவோம். சிங்கள அரசிடம் நீதி கேட்போம். ஆனால் எமக்கு நீதி வழங்க மறுத்து, சிங்கள அரசு மீண்டும், ஆயுதப் போராட்டத்துக்கு, இராணுவ அடக்குமுறைக்குத் திட்டமிட்டால்— எமது மக்கள் மீது மீண்டும் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டால்— நாம் எமது மக்களைப் பாதுகாக்கவும், இலட்சியத்தை முன்னெடுக்கவும் மீண்டும் ஆயுதப் போராட்டத்துக்குத் தயாராக இருப்போம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் இப்படித் தெரிவித்திருப்பதாக நெல்லியடியில் கடந்த சனிக்கிழமை நடந்த கூட்டத்தில் மக்களுக்குத் தகவல் கூறப்பட்டது.

ஸ்ரீலங்கா அரசுக்குக் கடைசிச் சந்தர்ப்பம்; தவறினால் யுத்தம் நடத்த நாங்கள் தயார் — என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அரசுக்கு எச்சரிக்கை அறிவிப்புச் செய்திருக்கிறார்; அதே கூட்டத்தில் வைத்து.

எந்த நேரத்திலும் எம்மீது யுத்தம் திணிக்கப்படலாம். அவ்வாறு திணிக்கப்படுமாயின் நாம் அதனை எதிர்த்து முறியடிப்போம். —இப்படித் தெரிவித்தவர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்டான்லி டொமினிக்.

கடந்த இரண்டு நாட்களில் விடுதலைப் புலிகள் உயர் மட்டத்தினர் தெரிவித்த கருத்துக்கள், தமிழர்களின் பிரச்சினை சம்பந்தமான அரசியல் சூழ்நிலை எவ்வாறு மாறி இருக்கிறது என்பதனை துலாம்பரமாக்குகின்றன. அதனைவிட —

திருகோணமலையில் சராசரியாக ஒரு மைலுக்கு ஓர் இராணுவ முகாம் என்று ஸ்ரீலங்கா படைகள் குவிக்கப்பட்டுள்ளன. மூதூர், சம்பூர், கிளிவெட்டி, தம்பலகமம் என்று தமிழர் கிராமங்களில் எல்லாம் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இன்னமும் 75 சதவீதமான சிங்களப் பொலிசாரே கடமை புரிகிறார்கள்.

தமிழ்ப் பிரதேசங்களில் ஸ்ரீலங்காப் படையின் வேவு விமானங்கள் பறக்கின்றன. பல இராணுவ முகாம்கள் ஆளணியினரால் பலப்படுத்தப்படுகின்றன.

இப்படியாக வடக்கு—கிழக்கில் ஒரு யுத்தச் சூழ் நிலைக்குக் கருக்கட்டி வருவதைக் காணமுடிகிறது. அதனால் முந்திய அரசுகள் கைக்கொண்ட இராணுவ அடக்குமுறைக்கே பிரேமதாச அரசும் திசைமாறுகிறதா?—மாறக்கூடும் என்ற சமிக்ஞைகள் காட்டப்படுகின்றன.

கலந்தாலோசனை, கருத்து ஒருமித்தல், இணக்கம் காணுதல் என்ற அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் சமரசப் பேச்சுக்களைத் தொடங்கிய பிரேமதாசா அரசு, சரியாக ஒரு வருடத்தில் எப்படிச் சறுக்கி, வழி மாறுகிறது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகி வருகிறது.

விடுதலைப் புலிகளுடன் பேசி இந்தியப்படையை வெளியேற்றியதும், சிங்கள அரசு தனது சுயரூபத்தைக் காட்டமாட்டாதா, தமிழர்களை சந்ததி சந்ததியாக ஏமாற்றிவரும் தந்திரத்துக்குத் திரும்பாதா என்று பலரும் கிளப்பிய சந்தேகத்தை அது ருசுப்படுத்தத் தொடங்கி இருக்கிறது.

அரசு ஒன்றைச் செய்யப்போவதாகச் சொல்ல, அதனை எதிர்க்கட்சிகள் பூதக் கண்ணாடியில் பெருப்பித்துக் காட்டி எதிர்ப் பிரசாரம், விஷமப் பிரசாரம்செய்ய, மேற்கொண்டு எதுவும் செய்ய முடியவில்லையே என்று தயக்கம் காட்டி, தனது நிலையிலிருந்து பின்வாங்கிய ஏனைய சிங்களத் தலைவர்களின் வரிசையில் தான் ஜனாதிபதியும் சேருவார் என்று பலரும் நினைத்தது உண்மையாகி வருகிறது.

ஏனைய சிங்களத் தலைவர்கள் போலன்றி உண்மையான மனதுடன், தாம் எண்ணியதைச் செய்யும் துணிச்சல் மிக்கவர், அவ்வாறு செய்து தமிழர் பிரச்சினையை நியாயபூர்வமாகத் தீர்த்து சரித்திரத்தில் இடம்பெறுவார் ஜனாதிபதி என்று சிலர் கூறியது வெறும் பொய்யாகி, புலம்பலாகி வருகிறது.

பேச்சுக்கள் தொடங்கி ஒரு வருடமாகிவிட்டது. ஆனால் ஆறாவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்குவதற்குக்கூட இன்னும் நடவடிக்கை இல்லை. தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க விருப்பம் என்பதற்கு சமிக்ஞை காட்டுவதே ஆறாவது திருத்த நீக்கம். அது குறித்து இன்னும் ஆரம்ப ஏற்பாடு தானும் நடப்பதாகத் தகவல் இல்லை.

இந்தச் சூழ்நிலையை மிக ஆழமாக, நுண்ணியதாகச் சிந்தித்தால் ஒன்று புலனாகும் அதாவது விடுதலைப் புலிகள் பலம் மிக்கவர்கள். உலகின் நான்காவது பெரிய படையான இந்திய இராணுவத்தையே செயலிழக்கச் செய்தவர்கள் அவர்களின் இராணுவ பலத்தை நலிவடையச் செய்யவேண்டும்.

அமைதி, பேச்சு என்று காலத்தைச் சற்றுக் கடத்தினால், —காலத்தை வாங்கினால்— போராளிகள் மனம் தளம்பலாம்; அதன்மூலம் புலிகளின் இராணுவ பலத்தைக் குறைக்கலாம். அதன் பின்னர் ''தருவதைப் பற்றிக்கொள்'' என்ற நிலைக்கு மேலோங்கலாம் என்று அரச பக்கம் நினைக்கிறது. அதுவே உள்ளார்ந்த தந்திர நோக்கம் என்பது புலனாகும். அடித்துக் கொல்லாமல் அரவணைத்துக் கொல்லும் சதி இது.

ஆனால் இந்த உள்ளார்த்தம் விடுதலைப் புலிகளுக்கு நூறு வீதம் விளங்கியிருக்கிறது, தெரிந்திருக்கிறது என்பதை அவர்களின் பேச்சுக்கள் எடுத்தியம்புகின்றன. அதனால் அவர்கள் எப்போதுமே விழிப்பாயிருக்கிறார்கள்; இதற்கும் தயார், அதற்கும் தயார் என்ற நிலையில் இருக்கிறார்கள். அவர்களை இலகுவில் ஏமாற்றிவிட முடியாது என்ற திருப்தியே ஏற்படுகிறது.

## சேவைக்காலப் பயிற்சி வகுப்பு

பருத்தித்துறை மே 22

யாழ். மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் கணக்கியல் வர்த்தகம் நிதி ஆகிய பாடங்களை ஜீ. சீ. ஈ. உயர்தர வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு நடைபெறவுள்ளது.

இவ்வகுப்பு இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன்கிழமையும் காலை 8. 30 மணி தொடக்கம் பி. பகல் 4. 00 மணி வரை யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். என வர்த்தக கல்வி அதிகாரி திரு. எஸ். சிவராசா அறிவித்துள்ளார். கணக்கியல் வர்த்தகமும் நிதியும் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் சகல ஆசிரியர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு வேண்டப்பட்டுள்ளது. (118)

# சகல அரச ஊழியர்களுக்கும்
# மொழித் தேர்ச்சிப் பரீட்சை

### அரச கருமமொழி அமுலாக்கல் அமைச்சின் உதவி ஆணையாளர் தகவல்

கிளிநொச்சி மே 22

சகல அரசாங்க ஊழியர்களுக்கும் மொழிதேர்ச்சிப் பரீட்சைகள் நடத்தப்பட உள்ளன. இதில் சித்தி பெறுபவர்களுக்கு சம்பள ஏற்றம் வழங்கப்பட உள்ளது.

பத்து தரங்களுக்காக இந்த பரீட்சைகள் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் நடத்தப்படும். தாய் மொழியை விடுத்து ஏனைய மொழிகள் இரண்டில் அரச ஊழியர்கள் பரீட்சை எடுக்க முடியும்.

மேலதிக மொழியில் சித்தி அடையும் ஒவ்வொரு தரங்களுக்கும் 15 ரூபா படி சம்பள ஏற்றம் வழங்கப்படும். இந்த சம்பள ஏற்றம் தொழில் ரீதியாக வழங்கப்படும் சம்பள ஏற்றத்தினை விடுத்து மேலதிகமாக வழங்கப்படும்.

அரச ஊழியர் ஒருவர் தனக்கு உள்ள மொழித் தகமையின் அடிப்படையில் விரும்பிய தரத்தில் பரீட்சை எடுக்கலாம். உதாரணமாக 4 ஆம் தர பரீட்சையில் சித்தி அடைந்தால் 60 ரூபாவும், 10 ஆம் தர பரீட்சையில் சித்தி அடைந்தால் 150 ரூபாவும் சம்பள உயர்வு வழங்கப்படும்.

இந்தமொழி தேர்ச்சி பரீட்சைகள் வெகு விரைவில் அந்தந்த மாவட்டங்களில் நடத்தப்பட உள்ளன என அரச கருமமொழி அமுலாக்கல் அமைச்சின் உதவி ஆணையாளர் திரு. வ. சிவராசசிங்கம் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார். (இ-76)

### வடக்கு- கிழக்கு மாகாண சபையின்
# நியமனங்கள், பதவி உயர்வுகள்
# குறித்து விசாரிக்க ஆணைக்குழு
### எழுதுவினைஞர் சங்கக் கூட்டத்தில் தீர்மானம் வரும்

யாழ்ப்பாணம் மே 22

''வடக்கு- கிழக்கு மாகாண சபை அரசாங்க அதிகாரிகளினால் ஏற்படுத்தப் பட்ட நியமனங்கள், பதவியுயர்வுகள் இடமாற்றங்கள் முறைகேடானவையாகவும் சட்டத்துக்கு முரணானவையாவும் இருப்பதனால் அவை பற்றி பூரண விசாரணை நடத்துவதற்கு குழு அமைக்கப்பட வேண்டும்.

இப்படிக் கூறும் தீர்மானம் ஒன்று இன்று நடைபெறும் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் 29ஆவது மாநாட்டில் நிறைவேற்றப்படவிருக்கிறது.

யாழ்- மத்தியகல்லூரியில் நடைபெறும் இம் மாநாட்டில் நிறைவேற்றப்படவிருக்கும் மற்றைய தீர்மானங்கள் வருமாறு:

★ பல்வேறுசேவைகளிலும் பதவி உயர்வு, பதவி அணிகள், தொடர்பாக ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு சிபார்சுகளின் அடிப்படையில் சலுகைகள் வழங்கப்பட்டன. ஆனால் எழுதுவினைஞர் சேவைக்கு இதுவரை ஆணைக்குழு நியமிக்கப்படவில்லை. உடனடியாக ஆணைக்குழு நியமிக்கப்பட்ட வேண்டும்.

★ முல்லைத்தீவு - திருகோணமலை ஆகிய இரு மாவட்டங்களையும் இணைக்கும் கொக்குளாய் - புல்மோட்டை,தாம்போதி பாலம் குறுகிய கால தாமதத்துடன் நிர்மாணிக்கப்பட்டு போக்குவரத்துச் சேவை இலகுவாக்கப்பட வேண்டும்.

★ வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல அரச அலுவலகங்களிலும் நிர்வாக கடிதத் தொடர்புகள் தமிழில் மட்டும் நடைபெற அரசு உதவ வேண்டும். [இ-3]

### செஞ்சிலுவைச் சங்க
# ஆரம்ப சுகாதாரப் பிரிவு பணிப்பாளர் நடத்தும் ஆய்வு

யாழ்ப்பாணம் மே 22

கிராமப்புற சுகாதார சேவைகள் குறித்து செஞ்சிலுவைச் சங்க ஆரம்பசுகாதாரப் பிரிவு பணிப்பாளர் செல்வி லீனா பொல்பூங் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்.

யாழ், குடாநாட்டில் பல பகுதிகளுக்கும் அவர் சென்று சுகாதாரத்தொண்டர் பயிற்சி சுகாதாரக் கல்வி ஆகிய வற்றை எவ் வகையில் நடைமுறைப்படுத்தலாம் என்பது பற்றி ஆராய்ந்து வருகிறார்.

வீமன்காமம்,வாதரவத்தை கிராமங்களில் அமைந்துள்ள கிராமிய சுகாதார நிலையங்கள் எவ் வகையில் மக்களின் சுகாதாரப் பணிக்கு உதவி வருகின்றன என்பது பற்றியும் ஆய்வுசெய்து வருகிறார். (இ-3)

### மயிலிட்டி வடக்கில்
# கிராமியச் சுகாதார ஆய்வு

காங்கேசன்துறை, மே. 22

மயிலிட்டிவடக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் மயிலிட்டி வடக்கு கிராமத்தில் கிராமிய சுகாதார ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

வீமன்காமம் பகுதி மருத்துவமாது திருமதி ரி. மேரி புஸ்பம் தலைமையில் சுகாதாரத் தொண்டர்கள் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டனர்.

கடந்த ஐந்து வருடகாலம் இராணுவ அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட சிறார்களின் போசாக்கின்மை, தொற்று நோய்த்தடுப்பு ஆகியன பற்றியே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

கிராமிய சுகாதாரக் குழுச் செயலாளர் திரு. க. பாலசுப்பிரமணியம் இந்த ஆய்வுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டார். (இ- 68)

# மட்டக்களப்பு மாவட்டத்திற்கு
# 5 லட்சம் புசல் விதை நெல் தேவை

பட்டிருப்பு மே 22

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும் போக நெற்சாகுபடி செய்வதற்கு சுமார் ஐந்து இலட்சம் புசல் விதை நெல் தேவைப்படுகிறதென மட்டக்களப்பு - சர்வதேச கெயர் நிறுவனம் மதிப்பிட்டுள்ளது.

ஐந்து இலட்சம் புசல் விதை நெல்லை ஒரு இலட்சத்து மூவாயிரம் ஏக்கர் காணியில் விதைக்க முடியுமென்றும் நிறுவனம் கணக்கிட்டுள்ளது.

மாவட்டத்தின் நெற்சாகுபடி அபிவிருத்தி சம்பந்தமாக உதயன் செய்தியாளர், கெயர் நிறுவன உயர் அதிகாரியை வினவிய போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது;

அரசு வருடாந்தம் பதினைந்து வீத விதை நெல்லை, அதுவும் திருந்திய விதை நெல்லை விநியோகிக்க வழியுண்டு. ஆனால் சிவில் நிர்வாகத் தடையினால் குறிப்பாக சென்ற வருடத்தில் முறையாகவும், சரியாகவும் விதை விநியோகம் செய்யப்படவில்லை. இதனால் பெரும் பாதிப்பு ஏற்பட்டதென்றே சொல்லவேண்டும். தற்போது மாவட்டத்திற்கு தேவையான திருந்திய விதைநெல்லை கெயர் நிறுவனம் உற்பத்திசெய்து, மூன்று ஏக்கர் முதல் காணி வைத்திருக்கும் ஏழை விவசாயிகளுக்கு வழங்க முன்வந்துள்ளது. — என்றார். [அ- 12]

## நாணய மாற்று விகிதம்

17-05-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 231.30 | 232.26 |
| 100 | அமெரிக்கடொலர் | 3997.15 | 4002.80 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6710 77 | 6742 63 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2431 70 | 2449.73 |
| 100 | பிரெஞ்சு பிராங்க் | 716. 57 | 730.09 |
| 100 | ஜப்பானிய யென் | 26.2111 | 26.4376 |

# வாசகர் திருமுகம்

## மீளக் குடியமர்வு நிவாரணம்

மீளக்குடியமர்தல் நிவாரணப் படிக் கொடுப்பனவு பெரும்பாலும் சகல பகுதிகளிலும் கொடுத்தாயிற்று. மணியம் தோட்டத்தில் வசிக்கும் சில குடும்பங்களுக்கு இக் கொடுப்பனவு இன்னும் வழங்கப்படவில்லை. அவர்களில் நானும் ஒருவன். எனது விண்ணப்பப்படிவங்கள் அப்பகுதி கிராமசேவக உத்தியோகத்தரிடம் அப் படிவங்கள் எனக்கு வழங்கப்பட்ட தினத்திற்கு மறு நாளே நேரடியாக ஒப்படைக்கப்பட்டவை. ஆனால் எனக்கு இன்றுவரை இந்நிவாரணம் வழங்கப்படவில்லை. மற்றைய குடும்பங்களின் பெயர்கள் பட்டியலில் வெளியாகியபோது அதில் எனதும் எனது தாயாரினதும் பெயர்கள் இல்லாமை கண்டு உடனடியாக எதுவித தாமதமுமின்றி எமது பகுதி கிராம சேவகரிடம் விசாரித்தேன். அதற்கு அவர், தான் ஆக வேண்டிய யாவற்றையும் செய்து முடித்து ஒப்படைத்ததாகவும், அதற்குப்பின் நடந்தவை தனக்குத் தெரியாதென்றும், மேல் விவரங்களை உதவி அரசாங்க அதிபரிடம் விசாரிக்கும்படியும் கூறினார். நான் உதவி அரசாங்க அதிபருக்கு மனுச்செய்து நேரில் சமர்ப்பித்தேன். அங்கு அவர்கள் விண்ணப்பப் படிவங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்து பார்த்தபோது எமது விண்ணப்பப் படிவங்கள் அவற்றில் இருக்கவில்லை.

இதை நான் மீண்டும் கிராமசேவகருக்கு அறிவித்தேன். எதுவித காரணமும் அவரால் கூறமுடியவில்லை. பின்பு அனேக மாதங்களின் பின் அவர் எனக்குச் செய்தி அனுப்பினார். நான் அவரைச் சந்தித்தபோது விண்ணப்பப் படிவங்கள் அவரிடம் இருந்தன. ஆவன செய்து இந் நிவாரணம் எமக்கு கிடைக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். ஆனால் இன்றுவரை எதுவித தகவலுமில்லை. பல தடவைகள் விசாரித்தும் சாதகமான பதில் கிடைக்கவில்லை. சம்பந்தப்பட்டவட்டாரங்கள் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

டி. பி. இமானுவேல்,
கொழும்புத்துறை.

## மீனவ மக்களுக்கும் கிடைக்குமா?

அண்மையில் நெடுந்தீவு விவசாய மக்களுக்கு 4000/- ரூபா நிவாரணப்பணம் வழங்கப்பட்டது. ஆனால் மீனவ மக்களுக்கு இப் பணம் வழங்குவதில் காலந்தாழ்த்தப்படுகிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீனவர்களும் இந்த நிவாரணத்தைப்பெற உதவி செய்வார்களா?

அ: மரியநாயகம்,
தலைவர்,
நெடு. குருகுலஆழ்கடல்.
மீனவர் கிராமிய சமூக
அபிவிருத்தி அமைப்பு.

## வசந்தபுரம் மக்கள் அவலம்

கொழும்புத்துறை மே 22

கொழும்புத்துறை கிழக்கு வசந்தபுரம் கிராமத்து மக்கள் குடி தண்ணீர் மலசலகூட, மின்சார வசதிகள் எதுவுமின்றித் தினமும் அவதியுற்று வாழும் நிலையில் உள்ளனர்.

கொழும்புத்துறை துறைமுகத்துக்கு அப்பால் மின் கம்பங்களில் விளக்குகள் இல்லை. இப்பகுதிகளில் இரவில் நடமாட மக்கள் அஞ்சுகின்றனர். படு மோசமான நிலையில் கடற் கரை வீதிபோக்குவரத்துக்கு உதவாமல் இருக்கிறது. துறைமுகத்திலிருந்து மணிப்புரி வரையிலான வீதி குன்றும் குழியுமாகக் காட்சிதருகிறது. (ப— 30)

## சுந்தரேஸ்வரன் குருபூஜை

பட்டிருப்பு, மே 22

மட்டக்களப்பு - அமிர்தகளி குருசாந்தி நிலையம் - சாயி பாபா கோயிலில் நாளை 23ஆம் திகதி பிரம்மஸ்ரீ சுவாமி சுந்தரேஸ்வரன் குருபூஜை நடைபெறும்.

இப்பூஜை வைபவம் இன்று ஆரம்பமாகி நாளை பிற்பகலில் முடிவடையும். (இ-121)

## நேர்முகப் பரீட்சை

கைதடி மே 22

தொலைக்கல்வி மூலம் பயிற்சி பெற விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை இன்று 22ஆம் திகதி காலை 9. 00 மணிக்கு யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற இருக்கின்றது.

ஏற்கனவேநேர்முகப்பரீட்சைக்குத் தோற்றியவர்கள் இதில் தோற்ற தேவையில்லை எனவும் தாமதமாக விண்ணப்பித்து ஏற்கனவேநேர்முகப்பரீட்சைக்குஅழைக்கப்படாதவர்களுக்கே இந்த நேர்முகப் பரீட்சை எனவும் தொலைக் கல்விப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ம.செ. அலெக்ஸாந்தர் தெரிவித்தார் (க-74)

# செய்திக்கொத்து

### இராச கோபுரம்

கரவெட்டி, மே. 22

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் இராஜ கோபுரம் பெரும் பணச் செலவில் உருவாக்கம் பெறுகிறது.

இது அமைக்கப்பட்ட பின்பு அடுத்த மாதம் 13ஆம் திகதி கும்பாபிஷேகம் நடத்தப்படும். (ப-70)

### திருட்டுப்போன பொருள்கள் மீட்பு

குருநகர், மே. 22

யாழ் பெரியபுலம் மகா வித்தியாலயத்திலிருந்து கடந்த ஆண்டு களவாடப்பட்ட நீரிறைப்பு இயந்திரம் நீர்க்குழாய், வயலின் இசைக் கருவி என்பன அண்மையில் மீட்கப்பட்டன எனப் பாடசாலை அதிபர் திரு. க. கனகசிங்கம் தெரிவித்தார். (ப-51)

### தேர்தல் இடாப்புப் பதிவு

கொழும்புத்துறை, மே. 22

யாழ். மாவட்ட வாக்காளர் இடாப்பில் தமது பெயர் பதிவு செய்யாதோர் யாழ். தேர்தல் திணைக்களத்தில் இப்பதிவினைச் செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. (ப-30)

### சிரமதானம்

பச்சிலைப்பள்ளி மே 22

பளை அரசினர் வைத்திய சாலை,அரசினர் பிரசவவிடுதி ஆகியவை பச்சிலைப்பள்ளி விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினரால் சிரமதானம் செய்யப்பட்டது.

சிரமதானத்தில் பச்சிலைப் பள்ளியிலுள்ள அனைத்து கிராம அபிவிருத்தி சங்கங்கள் சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர் என்று பச்சிலைப் பள்ளி அரசியல் பொறுப்பாளர் செல்வராசா தெரிவித்தார்.

வைத்தியசாலை, பிரசவ விடுதி ஆகியவற்றின் வளவு, வார்ட்டுகள் துப்பரவு செய்யப்பட்டன. (க-117)

### பிரெஞ்சு வைத்தியர்

கைதடி மே 22

மந்திகைஅரசினர் வைத்தியசாலையில் கடமையில் ஈடுபட்டிருக்கும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த எம்.எஸ்.எப். வைத்திய நிபுணர் குழு இம்மாதம் 24ஆம் திகதி தொடக்கம் ஒவ்வொரு வியாழக்கிழமையிலும் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும்.

இவர்கள் சாவகச்சேரியில் சிறிய சத்திரசிகிச்சையிலும் ஈடுபடுவார்கள் என தென்மராட்சி நோயாளர் நலன்புரிச் சங்கச் செயலாளர் தெரிவித்தார். [க-74]

### கருத்தரங்கு

சாவகச்சேரி மே 22

சிறுவர் நல்லொழுக்கப் பயிற்சிக் கருத்தரங்கு அறவழி காந்தி நினைவரங்கில் நடைபெற்றது. அறவழிப் போராட்டக்குழு பதில் தலைவர் திரு. கே.கோபாலகிருஷ்ணன் இப்பயிற்சி நெறியை ஆரம்பித்து வைத்தார்.

வைத்திய கலாநிதி பே. பிலிப்பு, ஆசிரியர்பொ.கந்தையா ஆகியோர் ஆசியுரை வழங்கினர். இப்பயிற்சியில் நூறு சிறுவர்கள் பங்குபற்றினர். (க-31)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வண. பிதா லோங் அடிகளாரின்

## சிறப்பிதழ்



என்றும் எதற்கும் ஏங்கி நிற்காது
நின்றுயர்ந்த சுமைதாங்கி.

## 1954 பிரியாவிடையில் அன்றைய சான்றோரின் பிரியா நினைவுகள்

### விளையாட்டு அபிமானி

கிரிக்கெட், உதைபந்தாட்டம், விளையாட்டுப்போட்டி, நாடகம் என்பவை மிகவும் பிரபல்யம் அடைந்தது லோங் அடிகளாரின் தலைமைத்துவத்திலேதான்.

Carnival (களியாட்டம்) Wrestling (மல்யுத்தம்) என்பனவும் லோங் அடிகளாரின் காலத்திலேதான் பிரபல்யம் அடைந்தன என்பதை யாழ். மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள்.

திரு. எப். ஜே. ஆம்ஸ்றோங்,
ஆசிரியர், சம்பத்திரிசியார் கலாசாலை.

### துணிவும் ஆற்றலும் மிக்கவர்

சென்ற கால் நூற்றாண்டிற்கு மேலாக யாழ் நகரின் சரித்திரத்தில் பிரபல்யமான பெயர் 'லோங் சுவாமி' என்பதேயாகும். யாழ்ப்பாணத்தின் மனநிலையைப் பூரணமாய் அறிந்து அதற்கேற்ப யாழ்ப்பாணச் சிறுவர்களை அவர்களின் பாரம் பரியங்களுக்கு ஏற்றவாறு பயிற்றுவிப்பதில் அவர் ஓர் விற்பன்னர். கல்வித்துறையில் அவர் அதிக ஈடுபாடு உள்ளவர். துணிவும் ஆற்றலும் மிக்கவர். எல்லோரினதும் நன் மதிப்பைப் பெற்றவர்.

திரு. கே. கனகரத்தினம்,
கல்வி அமைச்சு செயலாளர்.

### மாபெரும் சக்தி

யாழ். நகரில் லோங் அடிகளார் நன்மைத் தனத்திற்கு ஒரு சக்தியாய் இருந்தார். அவருடைய பரந்த உருவமும், பரவசமூட்டும் புன்னகையும், அவருடன் பழகும் எவரையும் கவர்ந்தது என்பது திண்ணம்.

கலாநிதி. ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை,
யாழ். ஆயர்.

### பலகலை விற்பன்னர்

வகுப்பிற்கு வரும்போது மாணவர்களின் தவறான பதில்களையெல்லாம் குறிப்பிட்டுக் கூறுவார். அத்தவறுகள் மீண்டும் ஏற்படாவண்ணம் அவற்றைத் திருத்துவார். பட்டி மன்றங்கள் அமைத்து விவாதிக்கும் திறனை எமக்கு அவர் கற்பித்ததுடன், வாய் வீச்சு என்னும் கலையை எப்படிச் சாதுரியத்துடன் கையாள வேண்டுமென்றும் காண்பித்தார்.

சொல் அம்பு எத்துணை வல்லமை கொண்டது என்று அவரிடமிருந்து நாம் அறிந்து கொண்டோம். அவர் கூறிய வார்த்தைகள் எத்துணை அறிவும் ஆற்றலும் உடையவை என்பதை எண்ணிப் பார்க்கும்போது அவர் ''பலகலை விற்பன்னர்'' என்னும் உண்மை புலனாகின்றது.

திரு. அஞ்ஞலோ ராஜகாரியர்,
கல்வி அதிகாரி, காலி.

### இளஞ்சந்ததியினரிடையே செல்வாக்குப் பெற்றவர்

எனது கவலை லோங் அடிகளார் இல்லாத இலங்கை எப்படி இருக்கும் என ஒருகணம் எண்ணினேன். அவரின் செல்வாக்கு இலங்கையில் என்றுமே மங்காது. அவரின் பிரிவால் துயருறும் யாழ். இளைஞர்கள் தாம் பெற்ற இன்பம் மற்றையோரும் பெறவிருப்பதை எண்ணி ஓரளவு ஆறுதல் அடைவர் என எண்ணுகிறேன்.

முயன்றால் முடியும் (Can-do) எனும் மந்திரத்தை மிக விரைவில் அவுஸ்திரேலியாவிலும் இளம் சந்ததியினர் கேட்டு செயலாற்றவிருக்கின்றனர் என்பது திண்ணம்.

திரு. அர்கஸ். ஜே. ட்ரெஸிடார்
அமெரிக்க தூதரகத்தின் பிரசாரப் பகுதி அதிகாரி



கன்னங்கரிய இருளா? தன்னந்தனி நிற்பேன்.

## வித்தொன்று விருட்சமானது!

மனிதன் தன் ஆற்றலின் பலனாக முன்னேற்றமடைகிறான். அவனது முன்னேற்றம் தமக்கும், தான் சார்ந்த சூழலுக்கும், அந்த சமூகத்துக்கும் அவனால் பயன்படுகிறது எனலாம். இவை நாம் வாழும் சமூகத்தில் காணும் நிலைகளாகும். தனி மனிதனின் ஆற்றல் ஒரு சமூகத்துக்கே பயன்படுவதாக இருக்கும்போது அதனைப் பயன்படுத்தாது, ஆற்றலில் தன்னம்பிக்கை அற்றவனாக வாழ நினைப்பவனின் வாழ்க்கை நடைப்பிணமாகத்தான் காட்சியளிக்கும்.

சிலரது வாழ்க்கையின் ஆற்றல்கள் சுயநலத்தில் வளர்க்கப்படுவதால், அவனால் அந்த சமூகமே சுரண்டப்படுவதனையும், கட்டுப்படுத்தப்படுவதையும், தன்னை சமூகம் மதிக்கவேண்டும் என்பதற்காகப் போலிவேடச் சுரண்டல் பேர்வழியாகவும் மாறிவிடுகிறான். இவை சமூக வளர்ச்சிக்குப் பெரும் முட்டுக்கட்டையாகவும் அமைந்துவிடுகிறது.

இம் மலரின் அட்டைப்படமாகக் காட்சி தரும் அந்த மாமனிதனின் உருவம் முப்பத்தைந்து வருடங்களின் முன்பே புகழ்பெற்ற ஓவியர் 'கொலற்' அவர்களினால் நகைச்சுவையாக வரையப்பட்டாலும் அதில் ஒரு கம்பீரம், அதில் ஓர் சமூகத் தோற்றம், அதில் ஓர் கருத்தாழம் உண்டு. இவை எல்லாம் எம் மண்ணின் பெருமைக்குச் சான்று பகரும். அந்த உருவம் யார்? என்ன தொடர்பு?ஏன் இந்த மதிப்பு?

அந்த மனிதனின் பிறந்த இடம் வேறு; பேசும் மொழியும் வேறு; வாழ்ந்த சூழல் வேறு. பயின்ற கல்வியோடு பார்க்கும் பணியும் அவரை அந்நிய தேசமான எம் மண்ணில் காலடி பதிக்க வைத்தது. அந்த வித்து விளைந்து விருட்சமானது போன்ற நிலைதான் அவரது ஆற்றல். ஆளுமை, உருவாக்கம், தன்னலமற்ற பணியினால் தனக்காக அல்ல, அவர் ஆற்றல் பிறர் வளர்ச்சிக்காகத் தன் பணியை பசளையாக்கி அதில் உருவான பல முளைகள் அந்த விருட்சத்தின் கிளைகளாகி இன்றும் அவர் நாமம் உரைக்கும்.

அந்த நெடுத்த உருவம் எமது மண்ணை வளப்படுத்தி, தன் ஆற்றலால் கல்வி விதையிட்டு, கல்லூரி வாழ்வோடு மட்டும் நின்றிடாது யாழ். பொதுசன நூல்நிலையத்தை உருவாக்க கையேந்திச் சேர்த்த பணத்தால் கட்டி வைத்து, ஆசியாக் கண்டத்திலே எமது புகழை நிலை நிறுத்தி, இன்றும் மங்கா புகழுடன் பலர் மனத்தில் உலாவும் 'லோங்' அடிகளார்தான். இத்தனை பெருமைக்கு உரிய மாமனிதன் அவர்தான்.

அயர்லாந்து தேசத்தில் பிறந்து, உயர்கல்வி கற்று, எம். ஏ. பட்டதாரியாகி, ஒரு துறவியாக எம் மண்ணில் 1936 இல் பணியாற்ற வந்தார்.

யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி வளர்ச்சிக்கு அரும் பணியாற்றி ஆங்கிலம், இலத்தீன் மொழிகளையும் கற்பித்து வந்தார். கண்டிப்பு மிக்கவர்.

இவரது கண்டிப்பும், மின்னல் வேகத்தில் தனது பிரம்பினால் தண்டனையளிப்பதும் மாணவர் மட்டத்தில் பெரும் கலக்கத்தைத் தரும்.

அவரது கண்டிப்பு, அவரது கட்டுப்பாடு அன்று அப்பாடசாலை உயர்வுக்கும் காரணமாய் இருந்தது.

ஆற்றல் மிகுந்த அவரது திறமையால் அமரர் மத்தியூஸ் அடிகளாரின் ஓய்வின் பின் அதிபராகினார்.

இவரது காலத்தில் கல்வியில் மட்டுமல்ல, விளையாட்டுத்துறையிலும் பெரும் புகழீட்டியது கல்லூரி. பல இன மக்களின் கல்வி வளர்ச்சியை அவரது பயிற்சி நெறிப்படுத்தியது. பல மத தலைவர்களையும், அரசியல் தலைவர்களையும் உருவாக்கிய இவரது முயற்சி முற்போக்கு சிந்தனைகளை புகுத்தவும் பின்நிற்கவில்லை. தான் கொண்ட கொள்கைதான் சரி என முரட்டுவாதம் கொள்ளாது காலத்தோடு தன் கடமைகளை செப்பனிட்டு வாழ்ந்தார்.

ஒருமுறை அமெரிக்கா சென்று திரும்பியவர் அங்குள்ள நடைமுறைகளை இங்கும் அறிமுகப்படுத்த முனைந்தார். அதில் முதற்பணியாக, தண்டனை கொடுக்கும் முறைகளை மாற்ற தனது முன் மாதிரியை ஏனைய ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் எடுத்துக் காட்டாக பகிரங்க தண்டனைக்கான பிரம்படியை நிறுத்தி, அந்த பிரம்பினை எரித்து சாம்பலை கசாலை நூலகத்தில் நிரந்தரமாக பார்வைக்கு வைத்தார். அன்றைய நாளின் நினைவாக லீவும் வழங்கினார்.

மாணவர்களுக்கு கல்வியில் போட்டி சிந்தனைகளை உருவாக்க (Can-do, Can-do) ''முயற்சி செய் உயர்ச்சி உனதே'' என்ற மகத்தான தத்துவத்தை நடைமுறைப் படுத்தினார்.

போட்டியில் வெற்றி பெறுபவர்களின் ஆற்றலை வளர்க்க, உற்சாகப்படுத்தி விருந்துகள் நடத்தினார்.

மக்களின் ஆற்றல்களையும் அபிலாசைகளையும் நன்குணர்ந்து எப்போதுமே அவர்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்தும் செயலாற்றியும் வந்தார். இவரது செயற்றிறனை அறிந்து அரசு கல்வி பற்றிய ஆலோசனைச் சபையில் அவரை ஓர் அங்கத்தவராக நியமித்தனர். இதன் பயனாய் இலவச கல்வித்திட்டத்தின்கீழ் தனியார் பாடசாலைகளும் இயங்க அனுமதிக்கப்பட்டன.

மக்களைக் கல்வியில் ஊக்குவிக்கவும், அவர்களின் அறிவுத் திறனை அதிகரிக்கவும் ஆற்றல்கள் ஒன்றுதிரட்டி செயற்படவும் ஒரு பொது நூலகம் அவசியம் என்று உணர்ந்து அதற்கென அரும் பாடுபட்டார்.

அவரின் பணிகளை உணர்ந்த மக்கள் ''லோங'' அடிகளாரின் உருவச்சிலையை யாழ். பொது நிலையம் முன்னால் அமைத்துள்ளனர்.

அவர் ஆற்றலால் நூலகத்தை ஆக்கிவிட்டார். சிலர் ஆற்றாமையால் அந் நூலகத்தையே அழித்துவிட்டனர். அதிகாரத்தை அவர் சாம்பலாக்கினார். சிலர் அவர் அமைத்த அறிவாலயத்தையே சாம்பலாக்கினர்.

அமரர் லோங் அடிகளாரின் நினைவு முத்திரையை வெளியிட்டு அவரின் அரும் பெரும் சேவைகளை நினைவு கூறவும் இலங்கை அரசு தீர்மானித்துள்ளது. ஆனால் இவ்வரசு அவர் நாமங்கூறும் நினைவாக நூலகத்தை புனரமைக்க தயக்கம் கொள்வதேனோ?

மதங்கடந்த நிலையில் மனித மனங்களின் ஆவலை புரிந்து தன் ஆற்றலால் தனக்கென வாழாமல், மக்களின் கல்வி, சமூகப்பணிகளுக்கென நம் நாட்டில் பல்லாண்டு வாழ்ந்து பணி புரிந்த உத்தமனாம் அமரர் லோங் அடிகளாரின் மகத்தான சேவைகளை நன்றியுடன் நினைவுகூரும் பல்லாயிரக்கணக்கானவர்கள் இலங்கையிலும், பல பிறநாடுகளிலும் வாழ்கின்றனர் என்பதை எண்ணும்போது அவரது ஆற்றிலின் பணி உலகளாவிப் பரந்துள்ளது என்று கூறுவது தவறாகாது.

இக் கட்டத்தில் நாம் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் பிறர்நலம், பொது நலம் என்னும் பரந்த, பாராட்டத்தக்க பண்புகளை எமது ஆற்றலால் நமது பணியெனக்கருதி, நாமும் நலமாய் வாழவேண்டும், ஏனைய மக்களும் நலமுடன் வாழவேண்டுமென்ற உயரிய இலக்கினை மனதில் பதித்து வாழ முற்படுவது அமரர் லோங் அடிகளின் ஆற்றல் நல்ல எடுத்துக்காட்டாகிறது.

நன்றி:-
('நான்' சஞ்சிகை)

பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
மற்றவர் தொண்டினும் மாண்புடைத்




### மறக்கப் போமோ

மாதவத்தாற் பெற்றெடுத்த மண்ணை நீத்
மாணிக்கம் போல்யாழூர் மடியில் வாய்
மேதகுநற் கலைஞானப் பட்டதாரி
மென்மதுர வாக்காளன் தூய நெஞ்ச
ஓதரிய திருமறையின் பணிப் பீடத்தில்
உடல்பொருளோ டாவியெல்லாம் ஒருங்
சாதனைகள் மலைமலையாய்ப் புரிந்த சான்
சற்குணனாம் 'லோங்' குருவை மறக்க

அறிவற்றங் காக்குமெனும் உண்மை ஓர்ந்
ஆசியநற் கண்டமதன் புகழ்மே லோங்
நெறிகற்றே நாம் வாழ்ந்து நிலைக்க வேண்
நிகரற்ற நூல்நிலையம் நிறுத்தி வைத்
குறியொன்றே மறையென்றே கொண்டபோ
கொள்கைகளில் முற்போக்கு வாதங் க
பொறிதெளிந்தே சிந்தனையில் உயர்ந்தோர்
புதையலெனத் திகழ்ந்தவனை மறக்கப்

அடிகொடுத்தே மாணவரை அடக்கி யாண்ட
அதிபரெனும் பெயர்நிலைக்கா தழித்தே
பிடியதனிற் பிரம்பதனை எரித்தோன் எங்
பெற்றவரும் கற்றவரும் மற்றோர் தா
முடிபுனைந்தே போற்றிவரு முதன்மையுற்
மூதறிஞர் கலைமன்றத் தேற்றி வைத்
விடியொளியைப் பொழிந்தொளிர்ந்த விண்
வித்தகனை இத்தரையில் மறக்கப் போ

முத்திரையில் இரத்தினத்தைப் பொறித்தா
முன்னேற்ற மன்னனெனத் துதித்தா
வித்தகனே மதபேதங் கடந்த பொன்னே
விலைமதிக்க முடியாத சொத்தே ஞான
புத்திரனே பொதுநலத்தின் மதுரத் தேனை
புசித்தவனே என்று நிதம் மதித்தாெ
அத்தனையும் முத்தொளியும் சேவைக் கீரீட
அமரபதிக் குமரனையாம் மறக்கப் போ


| | | | |
|---|---|---|---|
| **LANKEM**<br>AREA DEALER DEPOT<br>219, 221 - Power House Road,<br>JAFFNA. | **M. T. SOMASUNDRAM & SONS**<br>No. - 199, Power House Road,<br>JAFFNA. | **NEW VEMAKI**<br>CERAMICS & ELECTRICALS<br>27/3, Power House Road,<br>JAFFNA. | **MANIAMS TEXTILES**<br>JAFFNA. |
| **'வாமாஸ்'**<br>மதுபான களஞ்சியம்'<br>121/2, மின்சாரநிலைய வீதி.<br>யாழ்ப்பாணம். | **St. PHILOMENA'S PRESS**<br>102, Main Street,<br>JAFFNA. | **SOUND ENGINEERS**<br>194, Hospital Road,<br>JAFFNA. | **WHITE HOUS**<br>191, Main Street,<br>JAFFNA. |
| **வைமன் ஸ்ரோர்ஸ்**<br>59, பழைய பூங்கா வீதி,<br>யாழ்ப்பாணம். | **தவம் ஸ்ரோர்ஸ்**<br>40, ஈச்சமோட்டை வீதி,<br>யாழ்ப்பாணம். | **றாடோ காமன்ஸ்**<br>92, கொழும்புத்துறை வீதி,<br>யாழ்ப்பாணம். | **M. G. றேடர்ஸ்**<br>141, பிரதான வீதி,<br>யாழ்ப்பாணம். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ரின் முத்திரை வெளியீட்டு விழா

## ...ப்பிதழ்

...றந்த பொன்னாடும்
...ன்டினும் மாண்புடைத்தாமோ?




## ...கப் போமோ?

...றெடுத்த மண்ணை நீத்தே
...ால்யரூர் மடியில் வாய்த்தோன்
...னப் பட்டதாரி
...ாக்காளன் தூய நெஞ்சன்
...ா பணிப் பீடத்தில்
...ா டாவியெல்லாம் ஒருங்கேயீந்தோன்
...மலையாய்ப் புரிந்த சான்றோன்
'லோங்' குருவை மறக்கப் போமோ?

...மனும் உண்மை ஓர்ந்தே
...டமதன் புகழ்மே லோங்கும்
...வாழ்ந்து நிலைக்க வேண்டி
...நிலையம் நிறுத்தி வைத்தோன்
...றயென்றே கொண்டபோதும்
...ல் முற்போக்கு வாதங் கண்டோன்
...சிந்தனையில் உயர்ந்தோர் ஏத்தும்
... திகழ்ந்தவனை மறக்கப் போமோ?

...ணவரை அடக்கி யாண்ட
... பெயர்நிலைக்கா தழித்தே யன்பின்
...தனை எரித்தோன் எங்கும்
...கற்றவரும் மற்றோர் தாமும்
...ாற்றிவரு முதன்மையுற்றோன்
...லமன்றத் தேற்றி வைத்தோன்
...பொழிந்தொளிர்ந்த விண்மீன் போன்றோன்
...இத்தரையில் மறக்கப் போமோ?

...த்தினத்தைப் பொறித்தா லென்ன?
...மன்னனெனத் துதித்தா லென்ன?
...தங் கடந்த பொன்னே
... முடியாத சொத்தே ஞானப்
...நலத்தின் மதுரத் தேனைப்
... என்று நிதம் மதித்தாலென்ன?
...ந்தொளியும் சேவைக் கிரீடா?
...மரனையாம் மறக்கப் போமோ?

## போதனையை சாதனையாக்கிய உயர்ந்த மனிதர் லோங் அடிகள்

தோற்றத்தில் பருத்தவர் மட்டுமல்ல, நெடுத்தவரும் தான்! என்றாலும், தாயின் வயிற்றிலிருந்து வெளிவந்து, தொட்டிலிற் கிடந்த வேளையில், அவர் பெற்றாருக்கு எப்படி அந்தப் பெயரைச் சூட்ட முடிந்திருக்கும்?

சின்னஞ் சிறு குழவியிலேயே பிரகாசித்த ஆன்ம விசாலமும், ஆளுமை ஆகிருதியும் தான் அப்படிச் செய்ய வைத்ததா? ஆம்; Long என்ற பெயரைச் சூட்டியதற்கு அணுப்பிசகுமில்லாமல் அப்படிப் **பெரிய மனிதனாகவும் உயர்ந்த மனிதனாகவும்** வாழ்ந்து, நாட்டிற்குச்சேவை செய்து புகழ் படைத்தவர் வண. லோங் அடிகளார் என்றால் இதில் கிஞ்சிற்றும் புகழ்ச்சியில்லை!

பிறந்தது, வளர்ந்தது, படித்தது எல்லாம் அயர்லாந்தில். மதப்பணிப்போடு, கல்விப் பணிக்காகவும் கடல் கடந்து வந்து, எமது மண்ணில் கால் பதித்து 'யாதும் ஊரே யாவரும் கேளிர்!' என்ற தத்துவத்துக்கு இலக்கணமாய் இன, மத, மொழி, தேசம் யாவும் கடந்த சேவையாற்றினார். ஈழ மண்ணின் உயர்ச்சிக்காக அவர் ஆற்றிய சேவைக்கு அவர் மறைந்த பின்பும் வழங்கப்பட்ட மகத்தான கௌரவம், அவரைத் தேசிய வீரனாக உயர்த்தியுள்ளது!

புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்விப்பணி புரிய வந்தவர், அந்தப் பணியோடு, தாம் பூண்ட துறவு நெறிப் பணியுடனும் நின்றிருக்கலாம். பிறந்த நாடென்ன? புகுந்த நாடென்ன? மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை என்ற மகத்தான கோட்பாட்டுக்குத் தன்னை அர்ப்பணித்து, யாழ்ப்பாண மக்களுக்கும் ஈழ மக்களுக்கும் அவர் ஆற்றிய சேவை எத்தகையது?

கிழக்காசியாவிலேயே அழகிய கட்டட நிர்மாணம் எனப் புகழ் படைத்த எமது பொதுசனநூல்நிலையத்தை- அரக்கர்கள் தீ மூட்டி அழித்த அறிவாலயத்தை - ஆக்குவதில் லோங் அடிகளார் வகித்த பெரும் பங்கு-

யாழ் மக்கள் தமது பயணத்தை இலகுபடுத்தவும் விரைவு படுத்தவுமாக, விமானச் சேவையை யாழ். நகர் வரை விஸ்தரிக்கச் செய்த விசால மனப்பான்மை -

கல்வித்துறையில் தண்டனை முறையை அகற்றி, மாணவமணிகளை அன்பினால் வழி நடத்தி அறிவைத் தேட வழிவகுத்த புதிய கல்வி முறை-

இன்னும் உளவளர்ச்சியோடு உடல் வளர்ச்சியும் இணைந்து போகவேண்டுமென்று, விளையாட்டுத் துறையை ஊக்குவித்த பாங்கு -

கைத்தொழில், விவசாயம், கால்நடைவளர்ச்சிகளுக்கு அவர் ஆற்றிய பணி நமது யாழ் மண்ணின் வளர்ச்சி வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

வண. லோங் அடிகளாரை ஈழத்தின் தலைசிறந்த கூடார்ந்த சித்திரமேதையான கொலெற் (Collette) கோட்டும், தலைப்பாகையும், கையினில் குடையும், முருங்கைக்காய்க் கட்டுமாக அசல் யாழ்ப்பாணியாகவே திட்டினார் என்றால், அவர் எப்படித் தன்னை இந்த மண்ணுக்கு அர்ப்பணித்துச் சேவை ஆற்றினார் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை!

நற்குணம் என்றும், தர்மராசா என்றும், தேசப்பிரேமி என்றும் பெயர் சூட்டி, அனுகூலமற்றபயன்களையடைகிற எமக்கு, வண. லோங் அடிகள் நிதர்சனமான பணியாளனாகவும், பண்பாளனாகவும் விளங்கிப் பெருமை சேர்த்தார்.

'Can-do' என்பது அவரது தாரகமந்திரம். 'முயற்சி செய்; உயர்ச்சி உனதே!' என்பது அவரது நடைமுறைச் சித்தாந்தம்.

போதனையைச் சாதனையில் காட்டி, பெயருக்கேற்ப **உயர்ந்த மனிதனாக** விளங்கி புகழ்படைத்தார்.

வண. லோங் அடிகளாரின் மகத்தான சேவையைப் பாராட்டி, அரசு அவரைத் தேசிய வீரர் ஆகப் பிரகடனம் செய்து, அவர் பெயரில் முத்திரை வெளியிட்டுப் பெருமைப்படுத்தியதைக் கொண்டாடும் முகமாக எமது நாளிதழ்கள் விசேட அனுபந்தங்கள் வெளியிடுவது பெருமைக்குரிய விடயமாகும்!

உதயனில் வெளிவரும் சிறப்பு மலருக்கு வண. லோங் அடிகளாரைப் பற்றிக் கருத்துரைகளும், பாராட்டுக்களும் நல்கிய அறிஞர்களுக்கும், விளம்பரங்கள் தந்துதவிய வணிகப் பெருமக்களுக்கும் இம்மலரை அழகுறத் தயாரிக்க ஒத்துழைத்த உள்ளங்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றி உரியது.

★

— வண. லோங் அடிகளார்
ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டு
தொடர்புசாதனக்குழு.

பிறின்ஸ் கபிரியேல், T. M. அன்ரனிப்பிள்ளை,
L. L. B. யோசப் பாலா, ந. கனகசேகரம்,
S. சகாயநாயகம், அ. அன்ரன் ஜெராட்.

## சம்பத்திரிசியார் கல்லூரி அதிபரின் செய்தி

உள்ளத்தில் உன்பால் ஈர்க்கின்ற எதுவும் உயர்வுக்காய் உதவவேண்டும். அந்த எண்ணத்தில் வாழ்கின்ற வாழ்வுதான் மனதில் சேவையாய் மிளிர வேண்டும். இதுவே என்றும் நிலைக்கும் என்பதற்கு வண. லோங் அடிகளாரின் சேவை சான்று பகருகிறது.

இன்று எம் மண்ணின் மைந்தனாக எண்ணி அவர் ஆற்றிய பணிக்குப் பாராட்டு விழா எடுக்கிறோம் அவரின் முகத்திரையை முத்திரையாகத் தருகின்றது. அரசு, அதைவிட தேசியத் தலைவராக உயர்த்திக் கௌரவிக்கிறது. இதில் நாம் ஏன் அகமகிழ்கின்றோம். என்றால், எம்மில் ஒருவர் என்ற உணர்வை அவர் ஆற்றிய பணிகளால் இணைத்து ''யாழ்மகன்'' என்ற பெருமையை வெளி உலகுக்கு எடுத்துக் காட்டிய உயர்ந்த பண்புகளே காரணம். எமது கல்லூரி வளர்ச்சியிலும் அவரது பணிகள் அளப்பரியது. அவரது வழிகாட்டல் எமது கல்லூரிக்குப் பெருமை தந்தது.

அவரது சேவையின் முக்கிய நோக்கமே அறிவுச் செல்வத்தை அனைவரும் பெற்று வாழவேண்டும், அதனால அறிவுள்ள சமுதாயமாக உயரவேண்டும் என்ற நோக்குத்தான் அவர் எம்மிடம் எதிர்பார்க்கும் சிறப்பாக உள்ளது. அந்த அறிவை வளர்க்கும் அறிவாலயங்கள் எம் இனத்தை வழி காட்டினால் அவர் நாமம் என்றும் நிலைக்கும் என்ற நம்பிக்கையோடு சிறப்பிக்கும் மலர் சிறக்க வாழ்த்துகின்றேன்.

★

- அருட்திரு. பிறான்சிஸ் யோசப்
அதிபர் புனிதசம் பத்திரிசியார் கல்லூரி.



குறி தவறாத குறிக்கோள் வீரன்.

## சிறந்த கல்விமான்

எமது நாட்டிற்கு வருகை தந்து சேவையாற்றிய அயர்லாந்து தேசத்தைச் சேர்ந்த கல்விமான்களில் லோங் அடிகளாருடன் ஒரு சகாப்தம் முடிவடைந்துள்ளது. அயர்லாந்து நாட்டவன் என்பதன் பொருள் ஒரு போர்வீரன், ஓர் ஆசிரியன், ஒரு போதகன் என மூவகையாகும். இவற்றிற்கு லோங் அடிகளார் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார்.

**கலாநிதி வண. சேவியர் எஸ். தனிநாயகம்**
பேராசிரியர், இலங்கை பல்கலைக்கழகம்.

## செயல் வீரர்

எவரும் உள்ளே செல்லத்தயங்கும் இடமெலாம் லோங் அடிகளார் தனது வெண்ணிற ஆடையுடனும், வெண்கலக் குருசுடனும் எதுவித தங்குதடையுமின்றி புன்னகையுடன் உட்புகுவார்.

அவர் தனது நற்பண்பினாலும் புன்னகையினாலும் அரும்பெரும் சாதனைகளைப் புரிந்துள்ளார். யாழ். விளையாட்டுக் கழகத்தைப் பிரபல்யப்படுத்தினார்.

சிவில் விமான சேவையை யாழ்நகருக்குப் பெற்றுத் தந்தார். யாழ். பொது நூல்நிலையத் திட்டத்தின் செயல் வீரனாகத் திகழ்ந்தார்.

**திரு. A. E. தம்பர்**
யாழ். மத்திய கல்லூரி.

## இந்துக்கள் மறக்காத கிறிஸ்தவ மதகுரு

**லோங்** அடிகளார் ஒரு செயல்வீரன். யாழ் நகரையும், சம்பத்திரிசியார் கல்லூரியையும் இலங்கைப் படத்திலும் ஏன் உலகப் படத்திலும் இடம்பெறச் செய்துள்ளார்.

ஓர் 'இந்து' என்ற வகையில் நான் எனது கடமையைச் செய்யவேண்டுமென்றால் ஒரு கத்தோலிக்க குருவாகிய லோங் அடிகளார் இந்துக்களின் உண்மை நண்பன் எனும் உண்மையை வெளிப்படுத்தவேண்டும். அவரின் சேவைகளை 'இந்துக்கள்' என்றும் மறக்கமாட்டார்கள்.

**திரு. சி. பொன்னம்பலம்,**
யாழ் நகர பிதா.

## நூலக வளர்ச்சிக்கு உதவியவர்

யாழ் மத்திய நூல் நிலைய நிதியம் ஒன்று அமைக்க லோங் அடிகளார் இதில் முழு ஈடுபாடுகொண்டு அதன் உப அதிபரானார். நூலகத்துறையில் உலகப் பிரசித்தி பெற்ற கலாநிதி ரெங்கநாதனின் சேவைகளையும் பெறும் வாய்ப்பை ஏற்படுத்தியதுடன், லோங் அடிகளார் அமெரிக்காவுக்கும் பிரித்தானியாவுக்கும் எங்களின் விசேட பிரதிநிதி என்ற வகையில் திறம்படச் செயலாற்றிப் பல நன்மைகளைப் பெற்றுத்தந்தார்.

**திரு. T. முருகேசபிள்ளை,**
யாழ்/ நூல் நிலைய ஸ்தாபனச் செயலாளர்.

## இளைஞர் முன்னேற்றத்திற்கு அர்ப்பணித்த பெரியார்

18 ஆண்டுகளாகக் கலாசாலை அதிபராக இருந்த லோங் அடிகளார் சம்பத்திரிசியார் கல்லூரியை எப்படி முன்னேற்றினார் என்பது ஊரறிந்த உண்மை. விசேஷமாய் இளைய தலைமுறையினர் இதற்கு சான்று பகர்வர்.

தனது வாழ்வின் பிரதான பகுதியை எமது இளைஞர்களின் முன்னேற்றத்திற்கென்று அர்ப்பணித்து வாழ்ந்த லோங் அடிகளாரின் செல்வாக்கும், செயற்திறனுமே கலாசாலையின் முன்னேற்றத்திற்குப் பிரதான காரணமாய் இருந்தது என்று கூறினால் மிகையாகாது.

**வண. எஸ். நீக்கிலாப்பிள்ளை**
சம்பத்திரியார் கல்லூரி அதிபர்.



தொட்ட இடமெல்லாம் துலங்கும் பட்டை தீட்டிய வைரம்.

MANIAMS TEXTILES
JAFFNA.

ALDI
269/1, Power Houses Road,
JAFFNA.

SHABRA
Power House Road,
JAFFNA.

UTHAYAN
Navalar Road,
JAFFNA.

WHITEHOUSE
191, Main Street,
JAFFNA.

AUTO SUPPLIERS
42, Clock Tower Road,
JAFFNA.

V. T. & SONS
Qualified Opticians & Dentist
317, Clock Tower Road,
JAFFNA.

DSI CONSUMER SERVICE CENTRE
281, 'C' C Ponnampalam Road,
JAFFNA.

M. G. றேடர்ஸ்
141, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

லைடன் ரி ஸ்ரோர்ஸ்
No: 31, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

S. M. FERNANDO
Qualified Opticians
560, Hospital Road,
JAFFNA.

PRATHEEP VIDEO MOVIES
9/1 New Road,
Koiyathoddam,
JAFFNA.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

A/L கணக்கியல் மாணவர்கட்காக
வெளிவந்துவிட்டது! (அச்சில் பதித்தது)
**"கம்பனிக் கணக்குகள்"**
ஆசிரியர்: க. தங்கராஜா
B.Sc. (P.F.T) SP Dip In. Ed.
(கணக்கியல் ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி,
பகுதி நேர விரிவுரையாளர்,
தொழில் நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்)
விலை ரூ. 30/-
கிடைக்குமிடம்:-
**யாழ் நகர் புத்தகசாலைகள்**
தொகையாக வாங்குவோர்க்கு விசேட சழிவு உண்டு.
(3612)

## வெற்றிடங்கள்

**மொழிபெயர்ப்பாளர், தட்டெழுத்தாளர்**

ஆங்கிலத்தில் உள்ள அரியநூல்களைத் தமிழாக்கம் செய்ய மேலும் சில மொழி பெயர்ப்பாளரும் தமிழ்த் தட்டெழுத்தாளர்களும் தேவை. வயதெல்லை இல்லை. 27 - 05 - 1990 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும், 1 மணிக்கும் இடையில் தகுதிச் சான்றுகளுடன் நேரில் சமுகந் தரவும். திறமை, அனுபவத்துக்கேற்ப சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

தொடர்பு:
**இல. 6, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.**
(மணிக்கூட்டுக் கோபுரத்துக்கண்மையில்)
[3599]


## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**டாக்டர் வில்லியம். எஸ். சோமசுந்தரம்**
( விலி — சோமா )
''எங்கள் இதயத்தை விட்டு உங்கள் நீங்காத நினைவுகள் மறைபவில்லை''
அன்பின் மனைவி மங்களம்
பிள்ளைகள் Dr. சுறாஜ்.
ஸ்ரீராஜ், சுபராஜ், டக்ஷாயினி
மருமகள் வனோ, பேரன்
விலிஷான்

அன்னாரின் நினைவாக இன்று பி ப. 4 மணிக்கு நல்லூர் சென். ஜேம்ஸ் ஆலயத்தில் விசேட நற்கருணை ஆராதனை நடைபெறும்.
( 13206 )

## 31ம் நாள் நினைவு அஞ்சலி



திரு.
**வேலாயுதம் உமாபதிப்பிள்ளை**

தோற்றம்: 12 - 01 - 1938
மறைவு: 22 - 04 - 1990

பாசமெனும் நீருற்றி பண்புடனே எமைக்காத்து
நேசமெல்லாம் எமக்களித்து
நெஞ்சினிலே பதியவைத்து
சோகமெனும் புயலினிலே
சுழலவைத்து - எமைவிட்டு
போகமனம் வந்ததையா
மோட்சமெனும் வாயிலுக்கே

தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மைந்தன்,
உறவினர்கள்,

சேச் லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
[13255]

# சுதந்திரப் பிரகடன இடைநிறுத்தம்?
# லித். நாடாளுமன்றம் ஆராயும்!

### செவ்வாய்க்கிழமை முடிவு தெரியும்

வில்னியஸ், மே 21

சுதந்திரப் பிரகடனத்தை இடைநிறுத்தி வைப்பதுபற்றி முடிவு எடுப்பதற்காக லித்துஏனியா மாநில நாடாளுமன்றம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கூடும்.

சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து சென்று தனி நாடாகத் தன்னை லித்துஏனியா கடந்த மார்ச்சில் பிரகடனம் செய்தது.

அதைத் தொடர்ந்துசோவியத் மத்திய அரசுக்கும் லித்துஏனியாவுக்கும் இடையே அரசியல் நெருக்கடி ஏற்பட்டது.

லித்துஏனியாவை தனது வழிக்குக் கொண்டு வருவதற்காக சோவியத் அரசு அதன் மீது பொருளாதார முற்றுகையை விதித்தது.

இதனால் லித்துஏனியாவின் பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டு உள்ளது- தொழிற்சாலைகளில் ஆட்குறைப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில் லித்துஏனிய பிரதமர், அதிபர் கோர்பச்சேவை மாஸ்கோவில் சந்தித்துப் பேசினார்.

சுதந்திர பிரகடனத்தை இடைநிறுத்தம் செய்தால் ஒழிய லித்துஏனிய அரசுடன் பேச்சுக்களுக்கே இடமில்லை என்று கோர்பச்சேவ் அப்போது திட்டவட்டமாக தெரிவித்து விட்டார்.

இதைத் தொடர்ந்தே, சுதந்திர பிரகடனத்தை இடைநிறுத்தம் செய்வது குறித்து பரிசீலனை செய்து முடிவு எடுக்க லித்துஏனியா நாடாளுமன்றம் செவ்வாய் கூடவுள்ளது. (எ)

## ஹபிள் தொலை நோக்கியின் 1ஆவது படம் பூமிக்குகிடைத்தது!

கேப்கனவரல், மே 21

விண்ணில் வலம் வந்து கொண்டிருக்கும் ஹபிள் தொலைநோக்கி அனுப்பிய முதலாவது படம் கேப்கனவரல் தளத்தில் உள்ள நாஸா விஞ்ஞானிகளுக்குக் கிடைத்து உள்ளது.

கண்ணுக்குத் தெரியாமல் இதுவரை காலமும் இருந்து வந்த நட்சத்திரக் கூட்டம் ஒன்றை ஹபிள் தொலைநோக்கி முதன் முதலாக படம்பிடித்து அனுப்பி வைத்துள்ளது.

இந்த நட்சத்திரங்கள் எத்தனையோ ஆயிரம் ஒளி வருடங்களுக்கு அப்பால் உள்ளன.

விஞ்ஞானிகள் எதிர்பார்த்ததற்கு மாறாக ஹபிள் தொலைநோக்கிப் படங்கள் மிகப் பயனுள்ளவையாக உள்ளன என்று விஞ்ஞானிகள் திருப்தி தெரிவித்தனர்.

கடந்த மாதம் ஹபின் தொலைநோக்கி விண்ணுக்கு அனுப்பப்பட்டது.

ஹபிள் தொலைநோக்கி அனுப்பும் படங்கள் வானவியலின் மர்மங்கள் சிலவற்றை வெளிப்படுத்துவதாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக பி. பி. சி. விஞ்ஞான செய்தியாளர் தெரிவித்தார். (எ)

### பாலியல்குற்றம்

லக்னோ மே 21

தொழில் நிலையங்களில் பெண் ஊழியர்களைப் பாலியல் ரீதியில் துன்புறுத்துவதை ஒரு குற்றமாகக் கணிக்கும் சட்டம் ஒன்றை பிரான்ஸ் அரசு கொண்டு வரவிருக்கிறது.

## மாஸ்கோவில் அதிசயப்பெண் 700 கிலோ பாரம் சுமப்பார்!

மாஸ்கோ மே 21

லிய்த்யா ரிப்கோவா என்ற ரஷ்யப் பெண் யோகாசனப் பயிற்சியில் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்.

இவர் பயிற்சி செய்யும்போது 700 கிலோ கிறாம் பாரத்தை பல தடவை தூக்குகிறார். யோகாசனப் பயிற்சி மூலமே தனக்கு இதனைச் செய்ய முடிந்தது என அவர் கூறினார்.

பல வருடங்களுக்கு முன்பு மெலிந்து இருந்த இவர் தற்போது நல்ல திடகாத்திரமாக காணப்படுகிறார்.

மரக்கறி வகைகளையே இவர் அநேகமாக சாப்பிடுகிறார். மேலும் தானே தயாரித்த உணவுப் பொருட்களையே இவர் அதிகம் உட்கொள்கிறார்.

மேலும் ஒவ்வொரு 3 மாதத்திற்கு ஒரு முறை 10 தினங்கள் இவர் உண்ணாவிரதம் மேற்கொள்கின்றார்.

ஒவ்வொரு பயிற்சி காலத்தின் பின்னரும் 24 மணித்தியாலத்திற்கு எதுவும் சாப்பிடுவதில்லை. (எ)

### தெ. கொரிய ஜனாதிபதி ஜாப். விஜயம்

டோக்கியோ மே 21

இம் மாதம் 24 ஆம் திகதி தென்கொறிய ஜனாதிபதி ரொட்டேவூ ஜப்பானுக்கு விஜயம் செய்கிறார்.

மூன்று நாள் உத்தியோக விஜயத்தின்போது ஜப்பான் அரசுடன் முக்கிய பேச்சுக்களை அவர் நடத்துவர். (எ)

### திடீர் விஜயம்

பஹ்றைன் மே 21

ஐக்கிய அரபுக் குடியரசு ஷேக் அமிர்சுல்தான் இந்தோனேஷியாவுக்கு திடீர் விஜயம் ஒன்றை நேற்று மேற்கொண்டார். (எ)

## ருமேனியா பொதுத் தேர்தல்; ஆளும் கட்சி முன்னணியில்

புக்காறெஸ்ட் மே 21

ருமேனியா பொதுத்தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் ஆகியவற்றில் தேசிய மீட்பு இயக்கம் வெற்றி அடைந்து வருவதாக அறிவிக்கப்பட்டது

தேசிய மீட்பு இயக்கத்தின் சார்பில் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்ட பதில் ஜனாதிபதி திரு. எலியாணுஸ்கி முன்னணியில் நிற்பதாக அறிவிக்கப்பட்டது.

மூன்றுபேர் ஜனாதிபதித் தேர்தலில்போட்டியிட்டனர்.

70 அரசியல் கட்சிகள் கலந்துகொண்ட நாடாளுமன்ற பொதுத்தேர்தலிலும் தேசிய மீட்பு இயக்கமே கூடுதல் ஆசனங்களைப் பெற்று ஆட்சியைப் பிடிக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளது.

நாடாளுமன்றத்தில் 506 எம்பிக்கள் அங்கம் வகிப்பர்.

40 ஆண்டுகளுக்குப் பின்னர் ருமேனியாவில் நடைபெறும் முதலாவது சுதந்திரத் தேர்தல் இதுவாகும். (எ)

### சுரங்கப்பாதை

சொக்கெயின் போதைவஸ்துவைமெக்ஸிகோவில் இருந்து அமெரிக்காவினுள் கடத்துவதற்கு எல்லைப்புறத்தில் அமைக்கப்பட்டிருந்த இரகசிய சரங்கப்பாதை ஒன்றை அமெரிக்க சுங்க அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

துப்பறியும் படங்களின் பாணியில் அமைக்கப்பட்டிருந்த இந்த சுரங்கப்பாதை 60 மீற்றர் நீளமானது.

ஜேம்ஸ் பொண்ட் படம் ஒன்றில் வந்த இரகசியச் சுரங்கம் போன்று அமைக்கப்பட்டிருந்த இதனால் கொக்கெயின் போதைவஸ்து பல மாதங்களாகக் கடத்தப்பட்டு வந்ததாம். (உ)

## தனிநபரின் வெறியாட்டத்தில் எட்டு பலஸ்தீனியர் மரணம்

ஜெரூசலம், மே 21

இஸ்ரவேலினால் கைப்பற்றப்பட்ட காஸா பிரதேசத்தில் நேற்று சீருடை அணிந்த ஒருவர் தாறுமாறாகச் சுட்டதில் எட்டு பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்,

மனக் குழப்பம் அடைந்த நிலையில் அவர் சுட்டதாக இஸ்ரவேலிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த பலஸ்தீனியத் தொழிலாளர்கள் மீது அந்த நபர் சுட்டார்.

இச் சம்பவத்தை இஸ்ரவேலிய பிரதமர் யிற்ஷாக் ஷாமிர் வன்மையாகக் கண்டித்தார்.

இதனைத் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் பலஸ்தீனர்கள் வேலை நிறுத்தம்,ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

அப்போது பலஸ்தீனியருக்கும் இஸ்ரவேலியப் பொலிசாருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 8 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.

அரபுப் பிரதேசத்தில் அமைதி திரும்ப எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு இது ஒரு பின்னடைவாக அமைந்து உள்ளது என்று கருதப்படுகிறது. (எ)

### கருணாநிதி அறிவிப்பு

சென்னை, மே 21

தமிழகத்தில் மாநகராட்சித் தேர்தல்கள் எதிர் வரும் செப்டம்பர் மாதம் நடைபெறும் என்று முதலமைச்சர் கருணாநிதி அறிவித்தார். (எ)

### தீர்ப்பு

கெய்ரோ, மே 21

எகிப்து நாடாளு மன்றம் முறையாகத் தெரிவு செய்யப்படவில்லை என்று கெய்ரோ உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. (எ)

★ ஆயுதக்குறைப்புப் பற்றிய

## அமெ - ரஷ்ய பேச்சுக்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம்!

வாஷிங்டன் மே 21

சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்பச் சேவுடனான ஆயுதக் குறைப்புப் பற்றிய பேச்சுக்களில் ஒருபடி முன்னேற்றம் கண்டிருப்பதாக அமெரிக்க [illegible] ஜோர்ஜ் புஷ் அறிவித்தார். அணு ஏவுகணைகளை உற்பத்தி செய்வதைக் குறைப்பது, வானில் இருந்தும் கடலில் இருந்தும் ஏவும் ஏவுகணை உற்பத்தியை மட்டுப்படுத்துவது ஆகிய விஷயங்களில் இணக்கம் ஏற்பட்டுள்ளது [illegible] (எ)

## இந்திய அடக்கு முறையை எதிர்த்து பெனாசிர் பேச்சு

கெய்ரோ, மே. 21

காஷ்மீர் விடுதலைப் போராட்டத்தை அடக்க இந்தியா எடுக்கும் நடவடிக்கைகளை இஸ்லாமிய நாடுகள் கண்டிக்க வேண்டும்.

இப்படி பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் பூட்டோ எகிப்து தலைநகர் கெய்ரோவில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

எட்டு இஸ்லாமிய நாடுகளில் ஒன்பது நாள் சுற்றுப் பயணம் ஒன்றை பெனாசிர் மேற்கொண்டுள்ளார் என்பது தெரிந்ததே! (எ)

## பிறந்தநாள் வாழ்த்து



**★ செல்வி யாழேந்தினி ★**
(22 - 05 - 1990)

கோண்டாவில் வடக்கு கலைவாணி வீதியைச் சேர்ந்த நவரத்தினம் ராஜசுலோசனா தம்பதிகளின் செல்வப் புதல்வி யாழேந்தினி இன்று தனது முதலாவது பிறந்த தினத்தை கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, ரவி அண்ணா, அம்மப்பா, அம்மம்மா, மதன் மாமா, மாமி. ரஞ்சி சித்தி, பிரான்ஸ் சுரி மாமா, பிரான்ஸ் யசோ சித்தி, தேவா மாமா, சூரி மாமா, சந்து மாமா மற்றும் உற்றார், உறவினர் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.
(3615)

## திருமலையில் தங்குமிட வசதிகள்

**Accomodations in Trincomalee**

வெளி இடங்களில் இருந்து திருகோணமலைக்கு வந்து போகும் பயணிகளுக்கு எல்லா வசதிகளுடனும் நியாயமான கட்டணங்களில் நாளாந்த அடிப்படையில் தங்குமிட வசதிகள் உண்டு

| | |
|---|---|
| Double Rooms | இரட்டை அறைகள் |
| Single Room | தனி அறைகள் |
| Dometory | நீள் அறைகள் |

வாகனங்கள் நிறுத்த பாதுகாப்பான இடமும் வழங்கப்படும்.

CONTACT:

Manager,
VOTRE MAISON
(Your Home)
45, Green Road,
Trincomalee

முகாமையாளர்,
வோத்திர மேசோன்
(உங்கள் வீடு)
45, கிறீன் வீதி,
திருகோணமலை.
(13258)

உ
சிவமயம்

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமோதூத வருஷம் வைகாசித் திங்கள் 11ம் நாள் (25-05-90) வெள்ளிக்கிழமை மாலை 6.27 மணி முதல் 8.27 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

சங்குவேலி வடக்கு
திரு. திருமதி இராசேந்திரம் அவர்களின்
புத்திரன் திருநிறைச் செல்வன்
**இராசமன்னன்**
அவர்கட்கும்

சண்டிலிப்பாய் வடக்கு
திரு. திருமதி தர்மராஜா அவர்களின்
புத்திரி திருநிறைச் செல்வி
**நளினி**
அவர்கட்கும்

திருவருள் துணைகொண்டு திருமணம் நடாத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வைபவ இடம்: Pfarrheim Martini, Kirchhof - 13,4400 Munster

தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி ஜெயகோபால்

இ. தங்கம்மா
டச்சு றோட்,
சங்குவேலி.

திரு. திருமதி தர்மராசா
[13237]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்களுக்கு ஓய்வூதியம் ஏன்?
# சபையில் அமைச்சர் விளக்கம்

''சுமார் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் பேர் மீன்பிடித் தொழிலில் ஊக்கத்துடன் ஈடுபட்டுள்ளனர். ஆயினும் இம்மீனவர்கள் போதியளவு வருமானம் பெறுவதில்லை. அவர்களால் சேமிக்கவும் முடிவதில்லை. முதுமைக் காலத்தில் தமது பிள்ளைகள் அல்லது அரசு வழங்கும் உதவியை இவர்கள் எதிர்பார்க்கும் நிலை ஏற்படுகிறது.

இந்நிலை தொடருமானால் மீன்பிடித் தொழிலில் இளைஞர்களது ஆர்வம் குன்றி இத்தொழிலே அருகிப் போகும் ஆபத்தும் ஏற்படும்''

மீனவர் ஓய்வூதியம், சமூகப் பாதுகாப்பு சேமநலத் திட்டம் பற்றிய சட்டமூலத்தை கடந்தவாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரை நிகழ்த்திய கடற்றொழில், நீர்வள அமைச்சர் திரு. ஜோசப் மைக்கல் பெரேரா மேறுகண்டவாறு கூறினார்.

அவரது பேச்சின் சாராம்சம் வருமாறு;

முதுமைக் காலத்தில் அல்லது சேவை செய்ய முடியாதபோது மீனவருக்கு சமூகப் பாதுகாப்பு வழங்கல்; உழைப்பாளி மரணிக்கையில் அவரில் தங்கி இருப்போருக்கு நிவாரணம் வழங்கல்; விபத்துக்களும், ஆபத்துக்களும் நிறைந்த இத்தொழிலில் மீனவர் தொடர்ந்து ஈடுபட ஊக்கம் அளித்தல்: இளைஞர்கள் இத்துறையில் ஈடுபட உற்சாகம் தருதல்; சேமிப்புப் பழக்கத்தையும சிக்கனத்தையும் மீனவர் மத்தியில் ஏற்படுத்தல்; மீனவ சமூகத்தின் பொதுவான பொருளாதார நிலைமைகளை விருத்தி செய்தல் இவை இத் திட்டத்தின் நோக்கங்கங்கள் ஆகும்.

இத்திட்டம் இரண்டு அம்சங்கள் கொண்டது. வேலை செய்ய முடியாதளவிற்கு முதுமை அடைகையில் கிரமமாக ஓய்வூதியம் வழங்கல்; இரண்டாவதாக ஓய்வூதிய வயதுக்கு முன் ஊனமுற்றால் அல்லது மரணம் அடைந்ததால் காப்புறுதி வழங்கல்.

மீன் பிடித் தொழிலைச் சீவனோபாயமாகக் கொண்ட 18-55 வயதுக்கு இடைப்பட்டோர் இத் திட்டத்தின் கீழ் பயன் அடைவர்.

இத் திட்டத்தை மீன்பிடித் தொழில் அமைச்சும் விவசாய காப்புறுதி சபையும் கூட்டாக அமுல்படுத்தும் திட்டத்தில் இணைந்தோரது கிரமமான பணக் கொடுப்பனவுகள் மீன் பிடிக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சேகரிக்கப்படும்.

### தகைமைகள்

மீனவர் ஓய்வூதியம், சமூகப் பாதுகாப்பு சேமநலத்திட்டத்தில் 18-54 வயதுக்கிடையில் இணைந்து கொள்வோர் 60 வயதுவரை ஒரு குறிப்பிட்ட தொகை பணத்தை காலாண்டுக் கணக்கில் செலுத்துவார்கள். 55-59 வயதுக்கு இடையிலானோர் 20 காலாண்டு தொகையைச் செலுத்த வேண்டும்

60 வயது முதல் ஓய்வூதியம் வழங்கப்படும். உறுப்பினரின் வயது, பணம் செலுத்திய காலம், செலுத்திய மொத்தப் பணம் ஆகியவற்றைக் கணக்கில் எடுத்து ஓய்வூதியம் நிர்ணயிக்கப்படும்.

18 வயதில் இத் திட்டத்தில் சேர்பவர் 60 வயதாகும் போது 168 காலாண்டுத் தொகைகளைச் செலுத்தியிருப்பின் காலாண்டுக்கு சுமார் 12,500 ரூபா ஓய்வூதியமாகப் பெறுவார். 54 வயதில் இத்திட்டத்தில் சேர்பவர் 24 காலாண்டுத் தொகைகளைச் செலுத்தி அரையாண்டுக்கு 1,600 ரூபா ஓய்வூதியமாகப் பெறுவார். 55 – 59 வயதுக்கிடைப்பட்டோர் 20காலாண்டுத் தொகைகளைச் செலுத்தி காலாண்டுக்கு 600ரூபா ஓய்வூதியம் பெறுவார்.

இன்னும் இத்திட்டத்தில் ஊனப்பட்டால் கிடைக்கும் நலன்கள், மரணமடைந்தால் கிடைக்கும் நலன்கள் ஆகியனவும் அடங்கும்.

மீனவர்கள் ஆண்டின் எக்காலத்திலும் இத் திட்டத்தில் சேர முடியும். (ச-2)

## வன்செயலில்----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கணக்கில் எடுக்கப்பட மாட்டாது.

அவர்கள் தங்கள் குடும்பத்தினர் யாராவது வன்செயல்களின்போது உயிர் இழந்தமைக்கான அத்தாட்சியைப் பொலீஸாரிடமும், உதவி அரசாங்க அதிபர்களிடமும் இருந்து அறிக்கைகளாகப் பெற்று தமது விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

அதற்கான பிரத்தியேக படிவங்கள் எதுவும் இல்லை. தாங்களாகவே விண்ணப்பிக்கலாம்.

இவ் விண்ணப்பங்கள் கொழும்பிலுள்ள கல்விச் சேவை ஆணைக்குழுவுக்கு சம்பிரதாயபூர்வ அங்கீகாரத்துக்கு அனுப்பிவைக்கப்படும். பின்னர் நியமனங்கள் வழங்கப்படும் — என்றார்.

எதிர்வரும் 28 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் பயிலுநர் ஆசிரியர் நியமனம் தொடர்பான கூட்டத்தில் இந்த விண்ணப்பதாரிகள் பற்றியும் ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது (உ-39)

## வடக்கு-கிழக்கு---

தது.

பொதுமக்கள் காலையில் ஓரளவு வீதிகளில் நடமாடினார்களாயினும் நண்பகலுடன் வீதிகள் வெறிச்சோடின. அவசர தேவைகளுக்கு மக்கள் சைக்கிள்களிலும், நடந்தும் செல்வதை அவதானிக்க முடிந்தது.

அதேநேரம் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, வவுனியா, மாவட்டங்களிலும் ஹர்த்தால் காரணமாகச் சகல சேவைகளும் ஸ்தம்பிதம் அடைந்தன என்று அங்கிருந்து வரும் எமது செய்தியாளர்களின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ – 9-3)

## ஈ.பி.ஆர்.எல்...

றும் திரு. கே. பிரேமச்சந்திரன் எம். பி, புளொட் அமைப்பின் அரசியற் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த பிரமுகர் திரு. கரவைக் கந்தசாமி, தமிழர் விடுதலைக்கூட்டணியைச் சேர்ந்த எம். பி திரு. மாவை சேனாதிராஜா உட்பட பல அரசியற் பிரமுகர்கள் அந்த விருந்தில் கலந்து கொண்டனர்.

விருந்தில் பங்குபற்றிய திரு. ரஞ்சன் விஜேரத்னா திடீரென திருவாளர்கள் பிரேமச்சந்திரன், கரவை கந்தசாமி, மாவை சேனாதிராஜா ஆகியோரை மறைவான இடத்திற்கு அழைத்துச் சென்று நீண்ட நேரம் பேசினார்.

இந்தச் சந்திப்பின் போதே ஈ. பி. ஆர். எல். எவ்வுடன் பேச்சு நடத்த ஜனாதிபதி இணங்கியுள்ளார் என்ற விடயம் திரு. பிரேமச்சந்திரனுக்கு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவால் தெரிவிக்கப்பட்டிருக்கு என்றும் ஊகிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்புக் குறித்து உதயன் செய்தியாளர் திரு. பிரேமச்சந்திரனிடம் கேட்ட போது—

''தனியாகக் காற்று வாங்குவதற்காக வெளியே போயிருந்தோம். இலவசமாகக் கிடைக்கும் காற்றை நாம் ஒன்று சேர்ந்து வாங்கக் கூடாதா?'' என்று சிரித்துக் கொண்டு பதிலளித்தார்.

அதற்குமேல் இந்தச் சந்திப்புக் குறித்து அவர் தகவல் ஏதும் வெளியிடவில்லை. (உ-2)

## லோங் அடிகள்..-

செய்யப்பட்டுள்ளது. இன்று காலை 7 மணிக்கு விழா ஆரம்பமாக உள்ளது.

காலை 7 - 15 க்கு யாழ். பொதுநூல்நிலைய வளாகத்திலுள்ள லோங் அடிகளின் சிலைக்கு மாலை அணிவிக்கப்படும்.

7 – 30 க்கு யழ் பொது நூல் நிலையத்திலிருந்து பற்றிக்ஸ் கல்லூரிக்கு ஊர்வலம் புறப்படும்.

சாரணர் அணிவகுப்பை அடுத்து 9 மணிக்கு பற்றிக்ஸ் கல்லூரியின் 'மதுரம்' திடலில் முத்திரை வெளியீட்டு விழா இடம்பெறும்.

விழாவின் பிரதம விருந்தினராக யாழ் ஆயர் அதி வண. தியோகுப்பிள்ளை ஆண்டகை கலந்து கொள்வார். வடமாகாண தபால் அத்தியட்சகர் திரு. சேதுகாவலர் முதல் நாள் உறையை வெளியிட்டு வைப்பார்.

தொடர்ந்து பல பிரமுகர்கள் உரையாற்றுவர். இறுதியாக 'அயர்லாந்தின் யாழ்ப்பாணத்தான்' என்ற நூல் வெளியீடும் இடம்பெறும்.

மாலை நிகழ்ச்சியாக நல்லூர் - நாவலர் மண்டபத்தில் யாழ். மாநகர ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

கடந்த 19 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வென்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட உள்ளன.

(சிறப்பு மலர் உள்ளே)

(இ – 9)

## அரசின் பொறுப்பைத்----

மானது அல்ல.

இப்போதைய நிலையில் ஈரோஸ் பிரேரணை கொண்டு வந்தால் சபையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்ற முடியுமா என்பது சந்தேகமே.

ஆறாவது திருத்தத்தை நீக்கும் சட்டமூலம் அரசால் கொண்டுவரப்பட்டால் அதற்கு நிபந்தனையுடனேயே ஆதரவு தரமுடியும் என்று முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்திருக்கிறது. ஆகவே ஈரோஸின் பிரேரணைக்கு அவர்கள் ஆதரவு தருவார்களா என்பது கேள்விக்குறியே.

அரசாங்கத் தரப்பிலும் முன்னாள் அமைச்சர் காமினி திஸாநாயக்கா இப்போது சபைக்குவருவதில்லை. ஆகவே அவரது வாக்கும் கிடைக்காமல் போகும். மேலும் ஈரோஸ் கொண்டுவரும் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படும் போது ஆளும் கட்சியில் எத்தனைபேர் நாடாளுமன்றத்துக்கு சமூகம் தருவார்கள் என்பது தெரியவில்லை.

எம்முடன் சேர்ந்த எம். பி திரு. சாம் தம்பிமுத்து இப்போது உயிரோடு இல்லை. ஆகையினால் அவருக்குரிய வாக்கையும் உடனடியாகப் பயன்படுத்தக் கூடிய நிலை இப்போது இல்லை.

இந்தப்பின்னணியில்ஈரோஸ் பிரேரணையைக் கொண்டுவந்தால் அதனை மூன்றில் இரு பங்கு வாக்குகளுடன் நிறைவேற்ற முடியாமல் போய் விடும்.

### அரசாங்கம் பொறுப்பை தட்டிக்கழிக்கும்

அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் அதனைக் காரணம் காட்டி 6ஆவது திருத்தத்தை நீக்க வேண்டிய தனது பொறுப்பை நிறைவேற்றாமல் அரசு தள்ளிப் போட அது வாய்ப்பாகிவிடும்.

இத்தகைய பிரேரணை ஒன்றை முன் ஏற்பாடின்றி ஈரோஸ் கொண்டு வருவது அரசாங்கம் தனது பொறுப்பைத் தட்டிக் கழிப்பதற்கு அரசுக்கு ஒரு சந்தர்ப்பம் அன்ப்பதாகும்.

### ஆதரிக்கும்

ஆனால் -

இத்தகைய ஒரு பிரேரணையை ஈரோஸ்அமைப்போ அல்லது வேறு எந்த அமைப்போ கொண்டு வந்தாலும் அதற்கு அமைப்பு வேறுபாடின்றிஈ. பி. ஆர். எல். எவ்முழு ஆதரவைவழங்கும் என்பதை உறுதியாக தெரிவிக்கிறோம்.

இத்தகைய பிரேரணையை ஈ. பி ஆர். எல். எவ் ஏற்கனவே கொண்டு வந்திருக்க முடியும்; இப்போதும் கொண்டு வரலாம் ஆனால்மேற்கூறியவிடயங்களை கவனத்தில் கொண்டே நாம் அதைச் செய்யவில்லை.

ஆகவே ஆறாவது திருத்தத்தை நீக்கும் விடயத்தில் சகல தமிழ் அமைப்புகளும் ஒன்றுபட்டு [illegible] ஒருமனதாகச் [illegible] நல்லது- என்றார். (அ-உ-2)

## வீதி திருத்த வேலை ஆரம்பம்

கிளிநொச்சி மே 22

முறிகண்டி அக்கராயன் வீதி திருத்த வேலைகள் தற்போது மூன்றேமுக்கால் லட்சம் ரூபா செலவில் ஆரம்பமாகி உள்ளது வேலைகள் முற்றாக முடிவு அடைய மேலதிகமாக 8 லட்சம் ரூபா தேவைப்படுகின்றது. இந்தப் பணத்தைம் பெறும் முயற்சியில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் முயற்சிகளை மேற்கொண்டு உள்ளனர். (க-76)

## சூறாவளிக்கு 937 பேர் பலி!

புதுடில்லி, மே 22

ஆந்திர மாநிலத்தில் அண்மையில் வீசிய சூறாவளியால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 937ஆக அதிகரித்தது. (உ-எ)

## கப்பல் மூழ்கி 133 பயணிகள் பலி!

ஜாகர்த்தா, மே 22

இந்தோனேஷியா கடலில் பயணிகள் கப்பல் ஒன்று மூழ்கியதால் 133 பேர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இதுவரை 64 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. ஏனையோரின் கதி தெரியவில்லை.

தலைநகர் ஜாகர்த்தாவில் இருந்து 600 கிலோ மீற்றர் தொலைவில் இவ்விபத்து இடம் பெற்றது. (உ-எ)

## கால்நடை வளர்ப்பு குறித்து படித்த இளைஞருக்கு பயிற்சி

### திருநெல்வேலி பாடசாலையில்

யாழ்ப்பாணம், மே 22

கிராமிய கால்நடை அபிவிருத்தியாளர் பயிற்சி நெறியின் கீழ் படித்த இளைஞர், யுவதிகளுக்கு கால்நடை வளர்ப்புபற்றிய பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று திருநெல்வேலி விவசாயப் பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள பண்ணையாளர்களின் மூலவளத்தைக் கொண்டு அவர்களை முன்னேற்ற உதவும் வகையில் இவர்களுக்கு 'லிப்கோ' நிறுவனம் பயிற்சி அளித்து வருகிறது.

மூன்று மாத கால பயிற்சியின் பின் இவர்கள் கிராமிய கால்நடை அபிவிருத்தி நிலையங்கள் ஊடாக நியமனம் பெறுவார்கள். (இ-3)

## பிரிட்டிஷ் தூதர் வடக்கில் பங்குபற்றும் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், மே 22

இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வரும் பிரிட்டிஷ்தூதுவர் திரு. டேவிற் கிளாஸ்ரன் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவிருக்கிறார்.

நாளை மறுதினம் இங்கு வந்து சேரும் அவர், அன்று காலையில் ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிற்சாலைக்கு விஜயம் செய்வார்.

மாலை 4 மணிக்கு நக்கா வீதியில் உள்ள ஆங்கில அக்கடமி பரிசளிப்பு விழாவில் அவர் கலந்துகொள்வார்.

மறுநாள் காலை யாழ். பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்து, அங்கு உபவேந்தர், பேராசிரியர்கள் ஆகியோருடன் கலந்துரையாடுவார்.

அன்று மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் யாழ் வைத்திய சங்க வருடாந்தக் கூட்டத்திலும் அவர் கலந்துகொள்வார். (உ-3)

## 47 பிரமுகர்களுக்கு இன்று விருது

கொழும்பு, மே 22

தேசிய வீரர் தினத்தை ஒட்டி 47 பிரமுகர்கள் ஜனாதிபதியால் விருதுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்படுவர்.

உயர் விருதான 'தேசமான்ய' 5 பிரமுகர்களுக்கு வழங்கப்படவிருக்கிறது.

விவரம் வருமாறு:

1. ஜெனரல் சேபால ஆட்டிகல (பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதர்)
2. டாக்டர்நந்ததேவ விஜேசேகரா (முன்னாள் அரசகரும மொழி ஆணையாளர்)
3. டாக்டர் பதியுதீன் மஹ்மூர்த் (முன்னாள் கல்வி அமைச்சர்)
4. திரு. பி. மகாதேவா (தேசிய அபிவிருத்தி வங்கி தலைவர்)

ஏனையோருக்கு வித்தியா ஜோதி, கலாகீர்த்தி, தேசபந்து, கலாசூரி, ஸ்ரீலங்கா சிகாமணி, ஸ்ரீலங்கா திலகா ஆகிய விருதுகள் வழங்கப்படுகின்றன.

விருது வழங்கும் வைபவம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும்.

வண பிதா லோங், பேராசிரியர் எம்.பி. இரத்னப்பிரியா, டி பி நி. ஜெயவர்த்தனா, ஓவியர் மஞ்சுசிறி ஆகியோரின் உருவப்படங்கள் பொறித்த ஒரு ரூபா பெறுமதியான முத்திரைகள் இன்று வெளியிடப்படும். (உ-எ)

## ஒரிஸ்ஸா - -

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அளிக்கப்படுவதாக அவர் தமது நீண்ட பேட்டியில்தெரிவித்தார்.

ஒரிஸா முகாமில் பட்ட சஷ்டங்களையும் விவரித்திருக்கிறார். இவர் மூன்று பிள்ளைகளின் தந்தை. [அ)

## சந்திரசேகரன்- -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்து உண்ணாவிரதத்தை அவர் முடித்து வைத்தார்.

உண்ணாவிரதம் நடைபெற்ற வெலிஓயா, அட்டன் ஆகிய இடங்களுக்கும் மலையக மக்கள் முன்னணி பிரமுகர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்கள் அங்கே நடைபெற்ற உண்ணாவிரதங்களை முடித்து வைத்தனர்.

சந்திரசேகரன் விடுதலையை அடுத்து மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் பி. ஏ. காதர் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

மலையக மக்களுக்காக வடக்கு, கிழக்கில் ஹர்த்தால் அனுஷ்டித்து குரல் எழுப்பிய தமிழ் மக்களுக்கும், கடந்த சில தினங்களாக வேலை நிறுத்தம் செய்து வந்த 60 ஆயிரம் தோட்டத் தொழிலாளர்களுக்கும், உண்ணாவிரதிகளுக்கும், மலையக மக்களுக்காகக் குரல் எழுப்பிய அரசியல்வாதிகளுக்கும் மற்றும் பத்திரிகைகளுக்கும் அந்த அறிக்கையில் அவர் [illegible] தெரிவித்துக் கொண்டார். (இ-2)

## வடக்கிற்கான 4 ரயில் சேவைகள் நேற்று ரத்துச் செய்யப்பட்டன!

யாழ்ப்பாணம், மே 22

வடக்கிற்கான நான்கு ரயில் சேவைகளும் நேற்று நடைபெறவில்லை.

கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறைக்கான இரவு தபால் ரயில் சேவையும்-

காங்கேசன் துறையிலிருந்து கொழும்புக் கோட்டைக்கான காலை யாழ்தேவி ரயில் சேவை, இரவு தபால் ரயில் சேவை ஆகியவையுமாக மொத்தம் வடக்கிற்கான மூன்று ரயில் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டன.

கோட்டையிலிருந்து காங்கேசனுக்கு வரவேண்டிய காலை யாழ்தேவி ரயில் மட்டும் நேற்று அநுராதபுரம் வரை வந்து திரும்பிச் சென்றது.

ஈழத்தமிழர் பிரதேசங்களில் நேற்று இடம்பெற்ற ஹர்த்தால் காரணமாகவே இந்தச் சேவைகள் பாதிப்புற்றன.

இன்று ரயில் சேவைகள் வழமைபோல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை —

நேற்று முன்தினம் மாலை கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசனுக்கு புறப்படவிருந்து, பின்னர் ரத்துச் செய்யப்பட்ட இரவு தபால் ரயில் சேவை, இறுதி நேரத்தில் எடுக்கப்பட்ட திடீர் முடிவு காரணமாக நேர ஒழுங்கின்படி நடத்தப்பட்டது.

ரயில் என்ஜின் பற்றாக்குறை ஏற்பட்டு காங்கேசனிலிருந்து இன்று புறப்பட வேண்டிய காலை யாழ்தேவி ரயில் சேவை பாதிப்படைவதைத் தடுப்பதற்காகவே-

நேற்று முன்தினம் ரத்துச் செய்ய முடிவு செய்யப்பட்ட, இரவு தபால் ரயில் சேவையை, முடிவை மாற்றி மீண்டும் நடத்தியதாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த இரவு ரயில் நேற்றுக் காலை காங்கேசன் துறை வந்து சேர்ந்தது. பின்னர் காலையில் சில பயணிகளுடன் அந்த ரயில் அங்கிருந்து புறப்பட்டபோதும், காங்கேசன் ரயில் நிலையத்துக்குச் சற்றுத் தள்ளி அதன் சேவை நிறுத்தப்பட்டது.

இதேவேளை —

மன்னார், திருகோணமலை -மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்கும் கொழும்புக்கும் இடையிலான ரயில் சேவைகளும் நேற்று ஹர்த்தால் காரணமாக முற்றாகப் பாதிக்கப்பட்டன. (உ-3-9)

## காஷ்மீர் அரசியற் தலைவர் சுட்டுக் கொல்லப்பட்டார்!

### பின்னர் அவரின் சடலம் மீதும் சூடு!!

ஸ்ரீநகர், மே 22

காஷ்மீர் 'மக்கள் நடவடிக்கைக் கட்சியின் தலைவர் மேவரிக் பாரூக் நேற்று இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சூட்டுக் காயங்களுடன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட பாரூக், அங்கு மரணமானார்.

அவரின் ஆதரவாளர்கள் ஆஸ்பத்திரியை முற்றுகையிட்டனர். பின்னர் அவரது சடலம் மக்கள் நடவடிக்கைக் கட்சி தலைமையகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அபபோது திரண்டசனக் கூட்டத்தை கட்டுப்படுத்த பொலீஸார் சுட்டனர். அப்போது ஒரு குண்டு இறந்த பாரூக்கின் சடலத்தை துளைத்துச் சென்றதாக அறிவிக்கப்பட்டது.

இறப்பதற்கு முன்னர் 50 வயதான பாரூக் தனதுவாக்குமூலத்தில் தன்னைச் சுட்டவர் காஷ்மீரி போல் தோற்றமளிக்கவில்லை என்று கூறியிருந்தார்.

சகல போராளிக் குழுக்களும் ஒன்றுபட்டு காஷ்மீர் விடுதலைக்காக போராட வேண்டும் என்றும் அவர் மரணமடைவதற்கு முன்னர் வேண்டுகோள் விடுத்தார்.

காஷ்மீர் மக்களின் விருப்பத்தை அறிய சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று பாரூக் வாதாடி வந்தார். (உ-ஒ)

## வட, தென் யேமன்கள் இணைந்து ஒரு நாடாகும்

லண்டன், மே 22

வடயேமனுடன் இணைந்து ஒருநாடாவது என்றுதென்யேமன் நாடாளுமன்றம் நேற்று ஏகமனதாகத்தீர்மானித்தது.

இதைத்தொடர்ந்து இரண்டு யேமன் நாடுகளும் ஒருநாடாகும் பிரகடனத்தை அடுத்த 24 மணித்தியாலயங்களில் வெளியிடுவது என்று இரண்டு யேமன் அரசுகளும் முடிவு எடுத்தன.

## ஹோமகம பொலீஸார் 10 பேர் மீது விசாரணை!

கொழும்பு, மே 22

ஹோமகம பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த 10 பொலீஸார் மீது விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

அந்தப் பொலீஸ் பிரிவைச் சேர்ந்தபல பாடசாலைமாணவர்களை தீவிரவாத சந்தேசநபர்கள் எனக் கைதுசெய்துதடுப்புக்காவலில் வைத்து காயம் ஏற்படுத்தியது தொடர்பாகவே பொலீஸார் மீது விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன.

விசாரணை சம்பந்தமான அறிக்கை விரைவில் வெளிவரும் என பொலீஸ் மா அதிபர் தெரிவித்தார். (உ-2)

## சிங்களவர்களால் சூழப்பட்ட திருக்கடலூரில் புலிக்கொடி!

### மக்களின் துணிச்சலுக்கு யோகி பாராட்டு

திருகோணமலை, மே 22

''நான்கு பக்கமும் சிங்களவர்கள் சூழ்ந்திருக்க, நடுவில் ஒரு தமிழ்க் கிராமமாகத் தலை நிமிர்ந்து நின்றுகொண்டிருக்கிறது திருக்கடலூர்.

காலத்துக்குக் காலம் ஏற்பட்டு வரும் இனக் கலவரங்களில் எல்லாம் பல தமிழ் மக்களின் உயிர்கள் பலியிடப்பட்டிருக்கின்றன. அப்படியிருந்தும், இன்று இந்தக் கிராமத்து மக்கள் துணிச்சலுடன் புலிக் கொடியைப் பறக்கவிட்டிருக்கிறார்கள். இம்மக்களின் திடமனத்தைக் கண்டு பெருமைப்படுகிறேன்.''

—இவ்வாறு அண்மையில் திருக்கோணமலை திருக்கடலூர் சனசமூக மைதானத்தில் நடைபெற்ற விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கூட்டத்தில் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:-

உலகத்திலே விடுதலைப் புலிகள் இயக்கமானது ஒரு சிறந்த கெரில்லா அமைப்பு என்ற பெருமையுடன் திகழ்ந்துகொண்டிருக்கிறது. அதற்கு முக்கிய காரணம் எமது இயக்கத்துக்காக இன்னுயிர்களை அர்ப்பணித்த1400வேங்கைகள் மட்டுமல்ல· எமது தலைவர் பிரபாகரனின் சிறந்த வழிகாட்டலும் திறமையுமாகும்.

அத்துடன், பொதுமக்களாகிய உங்களில் சுமார் 26 ஆயிரம் பேர் தமது உயிர்களை அர்ப்பணித்து எமது விடுதலை இயக்கத்தை மாபெரும் மக்கள் சக்தியாக வளர்ந்துள்ளார்கள். அதை நாம் ஒருபோதும் மறந்துவிடமுடியாது'' — என்றார்.

### கிளிநொச்சி மாவட்டம்:

## 5,500 ஏக்கர் அரச காணி மக்களுக்கு பகிர்ந்தளிப்பு

கிளிநொச்சி, மே 22

கிளிநொச்சி மாவட்டத்தில் காணி கச்சேரிகள் மூலம் புதிதாக 5,500 ஏக்கர் அரச காணிகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட உள்ளன.

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 700 ஏக்கர் அரச காணிகள் பிரித்து வழங்கப்பட உள்ளன. இந்த காணிகளுக்கு இதுவரை 1,350 பேர் விண்ணப்பித்து உள்ளார்கள்.

பூனகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 1800 ஏக்கர் அரச காணிகள் பிரித்துவழங்கப்பட உள்ளன. இதுவரை இந்த காணிகளுக்காக 1993 மனுக்கள் கிடைத்து உள்ளன.

கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 1500 ஏக்கர் காணிகள் பிரித்து வழங்கப்படஉள்ளன. இதற்கு 560 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 1500 ஏக்கர் காணி பிரித்து வழங்கப்பட உள்ளது. இதற்கு 3490விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

இந்த காணிகள் முதல் கட்டமாக வறிய காணிஅற்ற குடும்பங்களுக்கு வழங்கப்படும்.

மீதி காணிகளை 2 ஆவது கட்டமாக மத்தியதர காணி அற்ற வர்க்கத்தினருக்கு வழங்கப்படும். இதில் அரச ஊழியர்களும் அடங்குவர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அந்தியகால சேவையில் உற்ற நண்பன் !
★ பிரேதப் பெட்டிகள்
★ மலர்வளையங்கள் ★ எம்பாமிங்
★ குழியுள் பிரேதம் இறக்கும் 'டிவைஸ்'
★ ஊர்வல ஊர்திகள்
பிறைற் ஹவுஸ்
(சென். ஜேம்ஸ் ஆலய அருகே)
210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

உதயன்
22 - 05 - 1990 செவ்வாய்க்கிழமை

உங்கள் இல்ல உபசரணை வைபவங்களைச் சிறப்பிக்க எம்மை நாடுங்கள்!
தகரப்பந்தல்கள், கதிரைகள், பீங்கான், கிளாஸ் வகைகள் மலிவு வாடகைக்கு பெற
பிறைற் ஹவுஸ்
(சென். ஜேம்ஸ் ஆலய அருகே)
210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# செஞ்சிலுவை அதிகாரிகள் யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம் மே 22

செஞ்சிலுவை சங்க சர்வதேசக் குழுவின் இரண்டு உயர் அதிகாரிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி ஜெனிவாவில் இருந்து யாழ்ப்பாணம் வருகிறார்கள்.

இந்தக் குழு தற்போது யாழ்ப்பாணத்தில் வதிவிடம் அமைத்துச் செயல்பட்டு வருகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் போர்கால நிலைகுறித்தும், புனர்வாழ்வு வேலைகள் குறித்தும் இவர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஜெனிவா தலைமையகத்தில் இருந்துவரும் உயர் அதிகாரிகள் இங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து ஆராய்வார்கள் என அறியவந்தது. (இ-3)

# 15 பொலீஸ் அதிகாரிகளுக்கு எதிராக ஊழல் விசாரணை!

கொழும்பு, மே 22

பல்வேறு நிதி மற்றும் ஊழல் சம்பவங்களுடனும் சட்டத்துக்கு முரணான செயல்களுடனும் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் பதினைந்துக்கும் மேற்பட்ட உயர் பொலீஸ் அதிகாரிகளுக்கு எதிராக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

மேற்படி விசாரணைகளை நடத்துவதற்காக பொலீஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேராவின் உத்தரவின் பேரில் கொழும்பு பொலீஸ் தலைமையகத்தில் விசேட விசாரணைப் பிரிவு அமைக்கப்பட்டிருக்கிறது.

பொலீஸ் தலைமையக வட்டாரங்கள் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தன.

# மேலும் 125 பட்டதாரிகள் முகாமைத்துவ பயிற்சிக்கு

யாழ்ப்பாணம், மே 22

வடக்கு-கிழக்கு மாகாண சபையில் கடந்த பெப்ரவரி, மார்ச் மாதங்களில் நேர்முகப் பரீட்சைக்கு சென்ற பட்டதாரிகளில் 125 பேர் முகாமைத்துவ பயிற்சிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒரு பகுதியினர் ஆசிரியர்களாகவும், மறுபகுதியினர் அரச திணைக்கள அதிகாரிகளாகவும் நியமனம் பெறுவர். (இ-3-9)

## ஆசிரியர்களுக்கு

# வடக்கு - கிழக்குக்குள் மற்றும் ஓர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், மே 22

வடக்கு-கிழக்கு மாகாணத்துக்குள் ஆசிரிய இடமாற்றம் ஒன்றை மேற்கொள்ள மாகாணசபைக் கல்வி அமைச்சு நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் பத்து வருடங்கள் கடமையாற்றிய ஆசிரியர்கள் வெளிமாவட்டங்களுக்குஇடமாற்றம் செய்யப்படவிருக்கின்றனர்.

பயிலுநர் பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் பெற்ற விவாகமாகாத பெண்கள் கிளிநொச்சி மாவட்டத்துக்கும், விவாகமாகாத ஆண்கள் கிளிநொச்சி தவிர்ந்த மற்றைய மாவட்டங்களுக்கும் இடமாற்றம் செய்யப்படவிருக்கின்றனர். விவாகமாகியவர்களுக்கு இடமாற்றம் கிடைக்காது.

இதுசம்பந்தமான பட்டியல் விரைவில் வெளிவருமெனத் தெரியவந்தது.

## பயிலுநர் ஆசிரியர் தெரிவு :

# யாழ். மாவட்ட நியமனங்கள் பற்றி ஜூனில் மீள்பரிசீலனை!

யாழ்ப்பாணம், மே 22

யாழ். மாவட்டத்தில் பயிலுநர் ஆசிரியர்கள் தெரிவு தொடர்பான மீள்பரிசீலனை அடுத்த மாத முற்பகுதியில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். கல்வித் திணைக்களத்தில் மேற்படி தெரிவு தொடர்பான நடவடிக்கைகளுக்கு பொறுப்பான உயர் அதிகாரி ஒருவர் வெளிநாடு சென்ற காரணத்தினால் மீள்பரிசீலனை நடவடிக்கைகள் தாமதித்து வந்தன.

ஆனால் சம்பந்தப்பட்ட அதிகாரி நாடு திரும்பிய பின்னும் மீள் பரிசீலனை நடவடிக்கைகள் தாமதித்து வந்தன.

மீள்பரிசீலனை தாமதிப்பது குறித்து, நியமனம் தொடர்பான மேன்முறையீடுகளைச் செய்திருந்த பல விண்ணப்பதாரிகளும் அதிருப்தி தெரிவித்து வந்தனர்.

ஆனால் கல்வி, உயர்கல்வி அமைச்சரான லலித் அத்துலத்முதலி, எதிர்வரும் 28ஆம் திகதி பயிலுநர் ஆசிரியர் தெரிவுகள் தொடர்பான மாநாடு ஒன்றைக் கூட்டியிருப்பதால் அந்த மாநாட்டின் முடிவுகளுக்கு அமைய மீள்பரிசீலனைகளை மேற்கொள்வது எனத் தற்போது தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-9)

NEW BECON
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
O/L 1990
DAY CLASS
திங்கள் — வெள்ளி
விஞ்ஞானம் — இரா. செல்வவடிவேல்
கணிதம் — சங்கர்
ஆங்கிலம் — பாலசுப்பிரமணியம்
சமூகக்கல்வி — திருக்குமார்
தமிழ் — பண்டிதர்
வர்த்தகம் — ஜீவா
★ ஆரம்பம்: 23 - 05 - 90 — 8.30 A.M ★
[விடுதி வசதி செய்துகொடுக்கப்படும்] (13225)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 22-05-1990இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கல்வி பணிப்பாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 22

வடக்கு-கிழக்கு மாகாணசபை கல்வி அமைச்சு பணிப்பாளர்களுக்கு நடத்தும் மாதாந்தக் கூட்டம் அடுத்த மாதம் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

கல்விஅமைச்சுமாதாமாதம் கல்விப் பணிப்பாளர்களுக்கு நடத்தும் கூட்டத்தை ஒவ்வொரு இடத்தில் நடத்துவதென முடிவு செய்துள்ளது. இதன்படிமுதலாவது கூட்டம் யாழ்ப்பாணத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து மாதாமாதம் மற்றைய மாவட்டங்களிலும் நடைபெறவிருக்கிறது.

இதற்கான ஏற்பாடுகளை கல்வி அமைச்சு பதில்செயலாளர் திரு.ஈ ஜே சற்குணராசா மேற்கொண்டுள்ளார். (இ-3-9)

# பண்ணிசைப் போட்டி இன்று

யாழ்ப்பாணம், மே 22

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் தேவஸ்தானத்தின் ஏற்பாட்டில் இன்று செவ்வாய்க்கிழமை பண்ணிசைப் போட்டி ஒன்று காலை 8 . 30 மணிக்கு இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெறும். (உ-3)

# நாளை திறப்பு விழா

யாழ்ப்பாணம், மே 22

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் கிளைக் கல்லூரி பரந்தனில் உள்ள குமரபுரத்தில் 20 லட்சம்ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நாளை 23 ஆம் திகதி நடைபெறும்.

இக்கல்லூரியில் முதலில் ஆரம்ப வகுப்பு மாணவர்கள் அனுமதிக்கப் படுவார்கள் காலப்போக்கில் இந்தக் கல்லூரியில் தொழில் நுட்பக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என அறிவிக்கப்படுகின்றது. (க)

# கனடாவுக்கு டிக்கெற் பெற கட்டுப்பாடு

கொழும்பு, மே 22

கனடாவுக்கு செல்வதற்கான டிக்கற் பெறவிரும்பும் —மலேசிய, சிங்கப்பூர் பாஸ்போர்ட் வைத்திருப்போரை —கனேடிய தூதரகத்திற்கு அனுப்பிவைக்கும்படி கொழும்பில் உள்ள கனடா தூதர் எயர்லங்கா உட்பட சகல விமான சேவை நிறுவனங்களையும் கோரியுள்ளார். (உ-எ)

# அபூர்வகுழந்தை!

ஜகார்த்த, மே 22

உலகத்தலைவர்கள், உலகப் பிரமுகர்கள், கல்விமான்கள், கலைஞர்களின் பெயர்களை ஞாபகத்தில் வைத்து "பட் பட்" என்று கூறும் அதிசயக் குழந்தை ஒன்று இந்தோனேஷியாவில் வாழ்கிறது.

சுயான்சியா என்ற அந்த ஒரு வயதுக் குழந்தை உலகத் தலைவர்களின் பெயர் தொடக்கம் பௌத்த மதத்தின் முக்கிய கோட்பாடுகள் வரை கேட்டவுடன் "பட்பட்" என்று பதிலளிக்கிறது. இக் குழந்தையின் அபூர்வ ஞாபக சக்தி குறித்து நேரில் பார்த்த அனைவரும் அதிசயிக்கிறார்கள்! (அ)

# சிப்பாய்கள் கைது

கொழும்பு, மே, 22

கொள்ளைகள் மற்றும் இளம் பெண்களை மானபங்கம் செய்தது ஆகியன தொடர்பாக இரண்டு இராணுவ சிப்பாய்களை மாத்தளைப் பொலீஸார் கைது செய்தனர்.

மூன்று கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக பொலன்னறுவ பகுதியிலும் ஓர் இராணுவ[illegible] கைது செய்யப்பட்[illegible] (உ-எ)

# பலஸ்தீனம் உருவாக எதையும் செய்யத் தயார்!

## ஜனாதிபதி பிரேமா அறிவிப்பு

கொழும்பு, மே 22

ஆக்கிரமிக்கப்பட்ட அரபு பிரதேசத்தில் சுதந்திர பலஸ்தீனம் உருவாக எதையும் செய்ய நாம் தயாராக இருக்கிறோம்.

ஜனாதிபதி பிரேமதாஸா நேற்றுக்காலை கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் ஆரம்பமான தெற்காசிய தஃவா இஸ்லாமிய மூன்றாவது சர்வதேச கருத்தரங்கில் பேசுகையில் முன்சண்டவாறு குறிப்பிட்டார்.

பலஸ்தீன மக்களின் சுதந்திரக் கோரிக்கைக்காக நாம் குரல்கொடுப்பது அரபுநாடுகளின் உதவியைப் பெறுவதற்காக அல்ல. பலஸ்தீன மக்களின் கோரிக்கை நியாயமானது என்பதை உணர்ந்தே நாம் அவர்களுக்காகக் குரல் கொடுத்துவருகிறோம்.

இலங்கையின் வெளியுறவுக் கொள்கை எந்தச் சித்தாந்தத்தையும் அடிப்படையாகக் கொண்டதல்ல. சகல நாடுகளுடனும் நாம் சமமான முறையிலேயே ராஜரீக உறவுகளைவைத்துவந்துள்ளோம்.

முஸ்லிம்கள் எப்போதும் இலங்கையின் நலனில் அக்கறையுள்ளவர்களாகவே செயற்பட்டு வந்திருக்கிறார்கள். ஆரம்ப காலத்திலிருந்தே -- அந்நிய சக்திகள் இலங்கையில் தலையிட்டபோது எல்லாம் - முஸ்லிம்கள் இலங்கை அரசுக்கு ஆதரவாகவே இருந்திருக்கிறார்கள் - என்றார்.

நேற்று ஆரம்பமான மேற்படி கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 27ஆம் திகதிவரை தொடர்ந்துநடைபெறும்.

இந்தக் கருத்தரங்கில் இருபது நாடுகளைச் சேர்ந்த இருநூற்றுக்கும் அதிகமான பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர். [உ-எ-2]

# மட்டக்களப்பு வாடிவீடு மீண்டும் செயற்படும்

மட்டக்களப்பு, மே 22

மட்டக்களப்பு நகர வாடிவீட்டை மீண்டும் திறந்து நடத்துவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது

இந்திய அமைதிப்படை வாடிவீட்டுக் கட்டடத்தில் முகாமிட்டிருந்தனர். வாடிவீடு நீண்டகாலமாக இயங்காமல இருந்தது.

அமைதிப்படை வெளியேற்றத்தை அடுத்து மீண்டும் வாடிவீட்டை இயக்க அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது. (உ 3)

# ஓய்வுபெற்ற 3 மாதங்களில் ஓய்வூதியம் கிடைக்கும்

## அமைச்சர் பெஸ்டஸ் உத்தரவு

அரசுத்துறை ஊழியர்கள் ஓய்வுபெற்ற மூன்று மாதங்களுக்குள் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கும்படி பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாணசபை அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா ஓய்வூதிய திணைக்களத்தைப்பணித்திருக்கிறார்.

விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியமும் தாமதமின்றித் துரிதமாக வழங்க நடவடிக்கை எடுக்கும்படியும் இந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது, (உ-எ)

# மலையகத்தினுள் ஊடுருவ தீவிரவாத குழு ஒன்றுமுயற்சி

## பொலீஸ் தலைமையகம் தகவல்

கொழும்பு, மே 22

வடபகுதியைச் சேர்ந்த தீவிரவாதக் குழு ஒன்று மலையகத்துக்குள் ஊடுருவல் நடத்தத் திட்டமிட்டிருப்பதாகத் தங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று பொலீஸ் தலைமையக வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

இந்தத் தகவல்களை அடுத்து மலையகத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப் பட்டிருப்பதாகவும் —

மலையகத்தில் நடமாடும் வெளியார் பற்றிய துப்புகளை அறிந்து கொள்வதற்காக விசேட உளவாளிகள் பலர் மலையகத்துக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-2)

# டெங்கு காய்ச்சல் பரவும் ஆபத்து!

கொழும்பு, மே, 22

கொழும்பு மாவட்டத்தில் இம்மாதம் இதுவரை பதின்மூன்று பேர் டெங்கு காய்ச்சல் காரணமாக இறந்தனர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 80 பேர் கடுமையான வைத்திய சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

சுமார் 200 நோயாளர்கள் வரையில் வெளிநோயாளர் பகுதிகளில் இந்நோய்க்கு சிகிச்சை பெற்று சென்றிருக்கிறார்கள்.

இக்காய்ச்சல் வெளிமாவட்டங்களிலும் வேகமாகப் பரவி வருவதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

டெங்கு காய்ச்சலைப் பரப்பும் நுளம்பு, அசுத்த நீர் தேங்கி நிற்கும் குட்டைகளில் உற்பத்தியாகிறது.

இதன்காரணமாக, சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பில் தீவிர கவனம் செலுத்தும்படி சகல உள்ளூராட்சி சபைகளையும் சுகாதார அமைச்சு கேட்டுள்ளது. (உ-எ)

# "எய்ட்ஸ்" அச்சத்தினால் ரப்பருக்கு அதிக கிராக்கி!

கொழும்பு, மே 22

"எய்ட்ஸ்" நோய் அச்சம் ரப்பர் சந்தைக்கு புத்துயிர் அளித்துள்ளது.

எய்ட்ஸ் நோய் பாலியல் ரீதியானதாகும். பாலியல் தொடர்பு வைப்போர் இப்[illegible] உற்பத்தி [illegible] அதிகமாகப் பயன்படுத்தும் சூழ்நிலையை "எய்ட்ஸ்" நோய் அச்சம் ஏற்படுத்தியுள்ளது.

அதனால் ரப்பரில் உற்பத்தி செய்யப்படும் அச்சாதனங்களுக்கு உலகில் கிராக்கி அதிகரித்துள்ளது.

இதனால் ரப்பருக்கும் உலக சந்தையில் கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. (உ — எ)

# பக்கம் பக்கமாக பாதுகாப்பு அரண்கள்

## ஆனையிறவு தடை முகாமில்

யாழ்ப்பாணம், மே 22

ஆனையிறவு தடைமுகாம் பகுதியில் ஸ்ரீலங்காபடையினரின் பாதுகாப்பு அரண்களும் "சென்றிகளும்" விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு அரண்களும் பக்கம்பக்கமாக அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்திய அமைதிப்படை முகாம் ஆனையிறவுத் தடைமுகாமிலிருந்து விலக்கப்பட்டபின் ஸ்ரீலங்கா பொலீஸார் மட்டுமே அங்கு முகாமிட்டிருந்தனர்.

ஆனால் கடந்த ஒரிரு தினங்களாக அங்கு ஸ்ரீலங்கா இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு வருகின்றனர்;

முகாம்களைஅண்டி 'சென்றி'களை அமைக்கும் வேலைகளில் படையினர் இப்போது ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை, இராணுவத்தினர் அமைக்கும் 'சென்றி'களுக்கு அருகில் விடுதலைப் புலிகளும் 'சென்றி'களை அமைத்து வருகின்றனர். (உ-3)

## ★ மட்டக்களப்பில்

# 104குடும்பங்களுக்கு நிவாரணம்; ரூபா 30 லட்சம் நிதி ஒதுக்கீடு

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 104 குடும்பங்களுக்கு கடும்பாதிப்புக்குள்ளானோர் நிவாரணக் கொடுப்பனவு வழங்க மட்டக்களப்பு செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வன்செயலின் போது உயிர் இழந்த, ஊனமடைந்தவர்களுக்கு நிவாரணம் வழங்க செயலகத்துக்கு 30 லட்சம் ரூபா கிடைத்துள்ளது.

இந்தக் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலைகளை மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. ஆர். யோகநாதன் மேற்கொண்டுள்ளார். (உ-3)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பொன்னுப்பிள்ளை திருநாமம்

கொக்குவில் கிழக்கு K. K. S. வீதியைச் சேர்ந்த திருமதி பொன்னம்மா திருநாமம் [பொன்னுப் பிள்ளை] காலமானார். இவர் காலஞ்சென்ற தம்பிப் பிள்ளை திருநாமத்தின் (மலாயன் பென்சனர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற S. M. அருணாசலம் (ஆசிரியர்), திரு. S. M. ஆறுமுகம் (Retd. Director of Irrigation) ஆகியோரின் அன்புச் சகோதரியும்: திருமதி மகாலட்சுமி பாலசிங்கம், திரு. மகேந்திரன் ஆகியோரின் அருமைத் தாயாரும், திரு. இராசையா பாலசிங்கத்தின் (Retd Signal Engineer, C.G.R )மாமியாரும், பாலகுமார், திருமதி சாந்தி விகைலைநாதன் (U.K.), திருமதி அமிர்தினி ராஜ்குமார் (U. S. A ), மகேஸ்வரகுமார் [ராஜன்], விஜயகுமார் (U. K. ) திருக்குமார் (கொக்குவில் இந்துக்கல்லூரி), ஆகியோரின் அன்புப் பேத்தியும், துஷ்யந்தி, நரேஷ் (U. K.) ஆகியோரின் அருமைப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் புதன்கிழமை 23 - 05 - 1990 ஆம் நாள் 3 ஆம் கட்டையடி, K. K.S. வீதி, கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று காலை 10.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
இராசையா பாலசிங்கம்,
"லஷ்மி வாசம்",
3 ஆம் கட்டையடி.
K. K. S. வீதி,
கொக்குவில். (3616)

## திருமதி செல்லத்துரை காந்திமதி

யாழ்ப்பாணம், ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை காந்திமதி 1990-05-21 ஆம் தேதியன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் செல்லத்துரையின் (முன்னாள் ஆசிரியர், பரமேஸ்வராக் கல்லூரி) மனைவியும், திருமதி சோதிலிங்கம் புஷ்பகாந்தி (ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி), திருமதி சிவசிதம்பரம் கமலாதேவி (சமூகசேவைப் பிரதிப்பணிப்பாளர், யாழ்ப்பாணம்), செல்வி விமலாதேவி (நீர்ப்பாசனத் திணைக்கள முன்னாள் உத்தியோகத்தர்), செல்வி இராசராசேஸ்வரி (S. C. F., யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற நித்தியானந்தன் (பிரதம பொறியியலாளர், மகாவலி அபிவிருத்திச் சபை) ஆகியோரின் தாயாரும், திரு. திருச்சிற்றம்பலம் (ஓய்வுபெற்ற நீர்ப்பாசனப் பணிப்பாளர்), திருமதி இராமநாதன் சிவகாமியம்மா, திருமதி தவராசா மகேஸ்வரி, திருமதி பரமநாதன் நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும். திரு. சோதிலிங்கம் (யாழ். கல்வித் திணைக்களம்), காலஞ்சென்ற சிவசிதம்பரம் (பரிஸ்ரர்) ஆகியோரின் மாமியாரும், செல்வன் செந்தூரன் (யாழ். இந்துக் கல்லூரி), செல்வி காயத்திரி (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற Dr. கனகரத்தினம், காலஞ்சென்ற இராசரத்தினம், மயில்வாகனம் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (1990-05-22) பிற்பகல் 1-00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

தகவல்:
இல.12, ஐயனார் கோவில் வீதி, சு. க. சோதிலிங்கம்
யாழ்ப்பாணம். [13241]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org